RECEIVED 1989-6-20 Periodicals Division

விலை ரூபா 3-00

# ஈழநாடு

THE EELANADU
'NATIONAL TAMIL DAILY'

மலர்: 31 | ஆனி 6 | துல்ஹஸ்தா 15 | இதழ் 33

யாழ்ப்பாணம் | செவ்வாய்க்கிழமை | 20-06-1989

## அமைதிப்படை: சர்வதேச நீதிமன்றத்தில் முறையீடு

# இலங்கைச் செய்திகள்: இந்திய பிரதமர் அதிர்ச்சி!

## உண்மைநிலை அறிவதில் தீவிர கவனம்

(புதுடில்லி)

**இந்திய அமைதிப்படையை விலக்கிக் கொள்வது தொடர்பான விவகாரம் சர்வதேச நீதிமன்றத்துக்கு எடுத்துச் செல்லப்படவுள்ளதாக வெளிவந்துள்ள செய்திகள் பெரும் அதிர்ச்சியைத் தந்துள்ளதாகவும், இச் செய்திகள் பற்றிய உண்மை நிலையை அறிவதில் இந்தியா தீவிர கவனம் செலுத்திவருகிறது என்றும் இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி நேற்று புதுடில்லியில் கருத்து வெளியிட்டார்.**

ஜனுதிபதி மாளிகையில் நேற்று நடைபெற்ற வைபவமொன்றில் கலந்துகொண்ட பிரதமர் திரு. காந்தி பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்தார்.

இலங்கையிலுள்ள இந்திய அமைதிப்படையை விலக்கிக் கொள்ளும் விவகாரம்தொடர்பாக சர்வதேச நீதிமன்றத்திலும், ஐ. நா. பாதுகாப்புச் சபையிடமும் முறையிடப்படவுள்ளதாக கொழும்புப்பத்திரிகைகளில் வெளியான செய்தி குறித்து நிருபர்கள் கேள்விகள் தொடுத்தனர்.

''பத்திரிகைச் செய்திகளை மட்டும் வைத்துக் கொண்டு இதுபோன்ற முக்கியமான

(8-ம் பக்கம் பார்க்க)

## இளைஞர்களை விடுவிக்குமாறு 'ஈரோஸ்' கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

கடந்த சில தினங்களாக வடக்கு-கிழக்குப் பகுதிகளில் கடத்தப்பட்ட ஆயிரக்கணக்கான இளைஞர்களை உடனடியாக விடுதலை செய்யுமாறு 'ஈரோஸ்' இயக்கத்தின் அரசியற்பிரிவான ஈழவர் ஜனநாயக முன்னணி வேண்டுகோள் விடுத்துள்ளது.

முன்னணியின் செயலாளர் திரு. வே. பாலகுமாரன் இது தொடர்பாக நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

(8-ம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறையில் தொடர்ந்து பதற்றம்

### நண்பகலுடன் கடைகள் மூடப்படுகின்றன

[பருத்தித்துறை]

பருத்தித்துறைப் பகுதியில் தொடர்ந்தும் பதற்றம் நிலவி வருகிறது.

துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டவண்ணமிருக்கின்றன. மக்கள் பயத்துடனும் பெரும்

(8-ம் பக்கம் பார்க்க)

## அவசரமாக சென்று திரும்பிய அரச அதிகாரிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் உள்ள அரச திணைக்களங்களைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் சிலர் கொழும்புக்கு அவசரம் அவசரமாகச் சென்று திரும்பியுள்ளனர் எனத்தெரியவருகிறது. இவ்வதிகாரிகள் கொழும்பிலுள்ள உயர்பீடத்தினரால் அழைக்கப்பட்டர்களா அல்லது இவர்களாகவே கொழும்புசென்ருர்களாஎன்ற விபரம் உடனடியாக தெரியவில்லை.

## திருநெல்வேலிப் பகுதியில் திடீர்மோதல்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலிப் பகுதியில் நேற்று நண்பகல் இடம்பெற்ற மோதலில் படையினர் தரப்பில் இருவர் பலியானதாகவும், சிலர் காயமடைந்ததாகவும் ஊர்ஜிதமற்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

இத்திடீர் மோதலைத் தொடர்ந்து திருநெல்வேலி பகுதி சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடவடிக்கைகள் தீவிரமாக்கப்பட்டன. இத்தேடுதலின்போது பலர் தீவிர விசாரணைக்குட்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

## நீண்ட நேரம் நடைபெற்ற சோதனை;சிலர்மீதுவிசாரணை

[சுன்னுகம்]

ஏழாலை, இணுவில் உட்பட மற்றும் சில பகுதிகளிலும் நேற்று வீடு வீடாகச் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அதிகாலையில் ஆரம்பிக்கப்பட்ட இந்த நடவடிக்கைகள் நண்பகல் வரையிலும் நீடித்தது.

எதிர்ப்பட்டவர்கள் பலரும் தீவிர விசாரணைக்குட்படுத்தப்பட்டனர், சிலர் அழைத்தும் செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## அச்சுவேலியில் மூவர் சுட்டுக்கொலை

[யாழப்பாணம்]

நேற்றுக்காலை அச்சுவேலியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இரு இளைஞர்கள் உட்பட மூன்று பேர் கொல்லப்பட்டனர்.

அச்சுவேலியில் பத்தமேனி பாரதி வீதியில் இச்சம்பவம் இடம்பெற்றது.

அச்சுவேலியைச் சேர்ந்த ஆசிரியர் சி. விஞயகமூர்த்தி, அவரது மகன், மற்றுமொரு இளைஞர் ஆகியோர் பலியானவர்களாகும்.

## ஜப்பானிய தூதரகபிரதிநிதி யாழ். ஆஸ்பத்திரிக்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

ஜப்பான்ய தூதுவராலயப் பிரதிநிதி திரு. குவாட்டோ நேற்று யாழ். போதனு வைத்தியசாலைக்கு விஜயம் செய்தார்.

யாழ்; போதனு வைத்திய சாலைப் பணிப்பாளரையும், மற்றும் டாக்டர்களையும், அதிகாரிகளையும் சந்தித்து உரையாடிய அவர், ஜப்பான் தூதுவராலயத்திஞல் வழங்கப்பட்ட 'எக்ஸ்ட்ரே' இயந்திரத்தையும், மற்றும் உபகரணங்களையும் பார்வையிட்டுச் சென்ருர்;

## யாழ். முத்திரைச் சந்தியில் இளைஞர் துப்பாக்கிசூட்டுக்குப் பலி!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் முத்திரைச் சந்தியில் நேற்று முன்தினம் இரவு ஒருவர் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி ஸ்தலத்திலேயே மரணமானுர்.

நல்லூர் மூத்தவிநாயகர் வீதியைச் சேர்ந்த சுப்பிரமணியம் சதிஷ்குமார் (வயது 19) என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

இவர் சம்பவதினம், நயினுதீவு சென்று திரும்பியபோதே இவ்வாறு இனந்தெரியாதசிலரால் சுடப்பட்டார் எனத் தெரியவருகிறது.

நேற்றுக்காலை யாழ். ஆஸ்பத்திரியில்ஒப்படைக்கப்பட்ட இவரின் சடலம் விசாரணையின் பின்னர் பெற்ருேரிடம் ஒப்படைக்கப்பட்டது. (கு)

## வருமானவரிப் பரிசோதகர் பருத்தித்துறையில் பலி

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நகரசபையின் வருமானப் பரிசோதகர் சி. ஆறுமுகம் பனங்காணிக்குள் நுங்கு பொறுக்கிக் கொண்டிருக்கும் போது துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி மரணமானுர்.

இதுபற்றித் தெரிவிக்கப்படுவதாவது:

மரணமான சின்னையா ஆறு

(8-ம் பக்கம் பார்க்க)

## இளம்பெண் அடையாளம் காணப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

யாழ். இராசாவின் தோட்டம் வீதியில் நேற்றுமுன்தினமிரவு துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி மரணமான இளம்பெண் யாழ். புங்கன்குளம் வாசியான நோர்விஞ ரூபிஞ நௌதீன் (19 வயது) என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

(8ம் பக்கம் பார்க்க)

## கஜேந்திரன் கொலைக்கு சென்ஜோன்ஸ் மாணவர் மன்றம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

மாங்குளம் புகையிரத நிலையத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில்மாணவன் ரி. கஜேந்திரன் பலியான சம்பவத்திற்கு சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவர் மன்றம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மாணவர் மன்றம் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'புகையிரதத்திலுள் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவன் ரி. கஜேந்திரன் பலியாஞர். இப்படிப்பட்ட நிகழ்வுகள் மாணவர்களை விரக்தியடையவே செய்கின்றன. சம்பந்தப்பட்டவர்கள் இனியும் இப்படியான சம்பவங்கள் ஏற்படாது பார்த்துக்கொள்ள வேண்டும்'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### இந்தியப் பிரஜைகள் தாக்கப்பட்டால்

# இந்தியப்படை தெற்குவரும்!

### அமைச்சர் தொண்டமான் பேட்டி

(கொழும்பு)

''தென்பகுதியில் இந்தியப் பிரஜைகள் தாக்குதல்களுக்கு உள்ளாஞல் தெற்கே இந்தியப் படைகள் கட்டாயம்வரவேண்டிய நிலை ஏற்படும், கிரனேடாவில் அமெரிக்கா என்ன செய்ததோ அதே நிலைக்கு [illegible]

[illegible] இந்தியப்பொருட்களையும், தொழில் ஸ்தாபனங்களையும் பகிஷ்கரிக்குமாறு ஜே. வி. பி. தெரிவித்திருப்பது நெருப்புடன் விளையாடும் ஓர் செயலாகும்'' என்ருர்.

''பொருட்களை பகிஷ்கரிக்கக் கோரும் அவர்களால் இந்தியாவில்

(7ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

தமிழ்மொழி அடிப்படை அறிவும் செயல் நெறியும், ஆண்டு 7, 8, 9 இந்நூல்கள் மொழித்திறன், அடிப்படை இலக்கணம், தொடரியல், பாடநூல்கள், செயல் நெறிகள் என்பனவற்றுடன் தேர்வு வினாத்தாள்களும் கொண்ட புதிய வெளியீடாகும். திறமைசித்திக்கு மாணவர்களுக்கு இது ஒருகை விளக்கு. வெளியீடு கு. வி. அச்சகம், யாழ்ப்பாணம். (சி-2971)

Hisex, Golden Comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவற்குஞ்சுகள், கறுப்பு சேவற்குஞ்சுகள், Hyline வெள்ளை, கறுப்பு, பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு வாரமும் முன்கூட்டியே பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம். சற்குணராஜா & பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (சி 2726)

சியாக்காய், பயறு, உழுந்து அரிசி ஆகிய நான்கு இயற்கை பொருட்கள் அடங்கிய சியாக்காய் பவுடரை பாவித்து உங்கள் கூந்தலை அடர்த்தியாகவும், குளிர்மையாகவும் வைத்திருக்கவும், கிடைக்குமிடம் M. G. M. 777 K.K.S. Rd 208, 1st Cross Street Jaffna. சி2928


## அறிவித்தல்
### ஏல விற்பனை

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் கீழ்வரும் பொருள்கள் 1989ம் ஆண்டு ஆனிமாதம் 27ம், 28ம் திகதிகளில் முறையே பின்வரும் பிரிவுகளில் ஏலத்தில் விற்கப்படும்.

27ம் திகதி: விஞ்ஞானபீடம், திருநெல்வேலி காலை 9.00 மணி.

28ம் திகதி: சித்த மருத்துவத்துறை, கைதடி காலை 10.00மணி.

28ம் திகதி: 484 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் காலை 11.00 மணி.

ஏலத்தில் வெற்றி பெறுபவர் பொருள்களுக்கான முழுப் பணத்தையும் பல்கலைக்கழக காசாளரிடம் செலுத்தி பொருள்கள் அனைத்தையும் அன்று மாலை 4.00 மணிக்கு முன்னதாக அப்புறப்படுத்த வேண்டும்.

(1) முட்கம்பி, முட்கம்பித் தூண்கள் — திருநெல்வேலி.
(2) கட்டிட கழிவுப்பொருட்கள்— சித்த மருத்துவத்துறை.
(3) தறித்த மரங்கள் – 484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

மேற்படி பொருள்களை 26-06-89 அன்று காலை 9.00 மணி தொடக்கம் 10.00 மணிவரை யாழ். பல்கலைக்கழக பொறியியலாளர் மூலம் பார்வையிடலாம்.

பதிவாளர்
யாழ். பல்கலைக்கழகம்.
(ஏ. 282)

## குடும்பஸ்தர் தற்கொலை
*(கிளிநொச்சி)*

பூநகரி அத்தாயவை சேர்ந்தகுடும்பஸ்தர் ஒருவர், மது அருந்துவதற்கு மனைவி பணம் கொடுக்காததால் ஆத்திரமடைந்து நஞ்சருந்தி மரணமடைந்தார்.

இறந்தவர் வேலுப்பிள்ளை இரத்தினம் (வயது 49) என அடையாளம்காணப்பட்டார். இம் மரணம் தொடர்பான விசாரணையை கிளிநொச்சிப் பகுதி திடீர் மரண விசாரணை அதிகாரி டாக்டர் கே. வி. கே. திருலோகமூர்த்தி, கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலையில் வைத்து மேற்கொண்டு தற்கொலை எனத் தீர்ப்பு வழங்கினர்.

## உதவி அரச அதிபர் அலுவலகங்களில் தேங்கிக் கிடக்கும் அடையாள அட்டை விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

தேசிய அடையாள அட்டைகளைத் தமிழிலுமெழுதிக் கொடுப்பதற்குரிய போதிய தமிழ் மொழி தெரிந்த உத்தியோகத்தர்கள் கொழும்பிலுள்ள தேசிய அடையாள அட்டை விநியோகத் தலைமை அலுவலகத்தில் இல்லையாம். இதனால் தமிழ்ப் பகுதிகளிலுள்ள உதவி அரசாங்க அதிபர்கள் சிலர் தமது அலுவலகத்துக்கு வந்துசேரும் அடையாள அட்டைகளுக்குரிய விண்ணப்பங்களைக் கடந்த சில மாதங்களாக கொழும்புத் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பிவைக்காமல் இருக்கின்றனராம்.

தமிழ்ப் பகுதியிலுள்ள பல உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களில் தேசிய அடையாள அட்டை விண்ணப்பங்கள் கடந்த சில மாதங்களாகப் பெருமளவில் கட்டுக் கட்டாக தேங்கிக்கிடப்பதாகவும் அறியப்படுகிறது.


மாணவ மணிகளின் மாணிக்கம்!
பரீட்சைத் தேர்வில் புதுமைப் புரட்சி!
பரீட்சையில் தேர்வு பெறுவோர் தேடிக்கொண்டது!
இதோ வெளிவந்து விட்டது.
திரு. ரி. நாகரத்தினம் B. Sc. (Cey)
அவர்களின்
அசேதன இரசாயனத்தின்
மின்னல் வழிகாட்டி
சகல புத்தக சாலைகளிலும் கிடைக்கும்
பிரதிக்கு முந்துங்கள்.
தொடர்புகள்:
ரி. திருச்செல்வநாதன்
இல. 195, 3-ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
(ஏ 293)


## ஒன்பதாவது ஆண்டு நினைவஞ்சலி



கோயிலாக்கண்டி
செல்வன்
சிவசுப்பிரமணியம் சாந்திநிகேதன்
(சாந்தன்)

மண்ணகம்: 03-02-1955 விண்ணகம்: 29-06-1980

நினைவில் நீங்கா நிறைமதியாம்
அன்புச் சாந்தனே!

தங்கள் ஆன்மா சாந்தியடைய அப்பு, அம்மா, அண்ணை, அக்காமார், தங்கைமார், தம்பி, மச்சான்மார், அண்ணி, மகள், மகன், மருமகன்மார், மருமகள்மார் யாவரும் வெயிலுகந்த விநாயகன் திருவடிகளைத் தினமும் வாழ்த்துகின்றோம்.

வே. சிவசுப்பிரமணியம்

'எபநேசர்'
நாயன்மார் கட்டு, நல்லூர்.

## கனடாவில் கார் விபத்து: யாழ். இளைஞர் பலி

[யாழ்ப்பாணம்]

கனடாவில் இடம்பெற்ற கார் விபத்தொன்றில் யாழ். நகர் இளைஞர் ஒருவர் மரணமானார். இச்சம்பவம் கடந்த வாரம் இடம்பெற்றது. இவரது சடலம் இன்று யாழ்ப்பாணம் வரலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

சவரிமுத்து நியூமன் (வயது 22) என்ற இந்த இளைஞன் தனது நண்பர்களுடன் கார் ஒன்றில் சென்றுகொண்டிருக்கையில் கார் வீதியைவிட்டு விலகி விபத்திற்குள்ளானதால் சவரிமுத்து நியூமன் அதே இடத்தில் மரணமானார். மற்றவர்கள் படுகாயமடைந்ததாகவும் தெரியவருகின்றது.

யாழ்ப்பாணம் கொன்வென்ட் வீதியில் வசிக்கும் தாய்-தந்தையரின் இல்லத்துக்கு நியூமனின் சடலம் இன்று வரலாமென எதிர்பார்க்கப்படுகிறது. (வி)

## பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தின் 1987-ம் ஆண்டு 2-ம் பிரிவு 'டேடா புரொசெசிங்' பரீட்சையில் சித்தி பெற்றோர் விபரம் துணைவேந்தர் பேராசிரியர் ஏ. துரைராஜாவினால் வெளியிடப்பட்டுள்ளது.

அவ்விபரம் வருமாறு;-

**திறமைச்சித்தி**

ஏ. சிறிரங்கராஜா, செல்வி ஜீ. திருமகள், திருமதி ஜி. சண்முகநாதன், கே. சிவபாதசுந்தரம், கே. நாகநாதன், எம். பொனடிக்ற் அமிர்தராஜ், திருமதி ஆர். ஈஸ்வரன, எஸ். சிவகுமார், எஸ். ரவீந்திரா, எஸ். ஜோன் அனந்தநாதன், எஸ். சத்தியகுமார், செல்வி எஸ். ராஜசிங்கம், எஸ். நற்குணம், செல்வி எஸ். கந்தையா, ரீ. சக்திதரன்.

**சித்தி**

சி. கமலநாதன், செல்வி ஜே. சிவஞான சுப்ரமணியம், செல்வி ஜே. ராதிகா, கே. சாந்தகுமார், செல்வி கே. செல்லத்துரை, கே. செந்தில்வேற்பிள்ளை, கே. முருகவேல், கே. தெய்வேந்திரநாதன், கே. திருஞானந்ததாஸ், செல்வி கே. தனபாலசிங்கம், எம். ரகுபரன், ஆர். அறிவழகன், செல்வி ஆர். ராஜசேகரம், செல்வி ஆர். இலங்காநாயகம், செல்வி எஸ். சதாசிவம், எஸ். பரமேஸ்வரன், எஸ். சிறிகரன், திருமதி எஸ். குமாரவேல், எஸ். விமலச்சந்திரன், செல்வி வி. பரமசாமி, வி. ஸ்ரீஸ்கந்தராசா, செல்வி வை. யோகேஸ்வரன், செல்வி வை. பாலசிங்கம், எம். சிறிகரன், ஏ. டெனிஸ், எஸ். துரைராஜா, சுதர்சன், வை. ரவீந்திரன், கே. குலேந்திரன், எஸ். செந்திவாசன், கே. லங்கேசன், செல்வி ஜி. ஆசைப்பிள்ளை, சி. சோலமன் யோகநாதன், செல்வி யூ. வேலுப்பிள்ளை, எஸ். கோணேஸ்வரமூர்த்தி.

## ஓராண்டு நினைவஞ்சலி

V. M. P.  V. M. P.

காரைநகர் சம்பந்தர் கண்டியைச் சேர்ந்த
யாழ்நகர் பிரபல வர்த்தகர்
ஸ்ரீமான்
விஸுசித்தம்பி - முருகேசு - பரமநாதன்
அவர்கள்

தோற்றம்: 12-03-1923 நிறைவு; 30-05-1988
திதி; 20-06-1989

நீதியில் நேர்மையில் நிலைத்தவா வணிபத்தில்
நின்றெழுந் தெங்களை நேர்நெறி வைத்தாய்
சோகியாய் எம்மிடைத் தோன்றியெம் வாழ்வில்!
துன்பங்க ளின்றியே துரந்தெமை வளர்த்தாய்
பாதியா(து) உறவினைப் பக்குவப் படுத்தும்
பண்பினைக் காத்தனை பரிவுடன் அன்பர்
ஏதிலா நின்னுடன் தொழில்புரி வோர்க்கெலாம்
இனியனுய் என்றுமே இருந்தனை ஐயா!
நான்கும் இரண்டும் போல் நல்லுப தேசங்கள்
தேன்போல் இனித்துமே தித்திக்கும் ஆனைகள்
சான்றுயத் துணைசெயத் தக்கன ஐய நின்
ஆன்ம சாந்திக்காய் அஞ்சலி செய்குவோம்.

மனைவி, மக்கள், மருமகன், உடன்பிறந்தார்,
அவரது சக ஊழியர்கள்.

இல: 55 அரசடி வீதி,
யாழ்ப்பாணம். (சி-2983)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஷ்மீர் எல்லையில் 72-ம் ஆண்டு நிலைக்கு

# இந்திய - பாக். படைகள் வாபஸ்!

## இரு நாடுகளும் இணக்கம்

(இஸ்லாமாபாத்)

**காஷ்மீரில் இந்திய-பாகிஸ்தான் எல்லையின் சியாச்சின் பகுதியிலிருந்து படைகளை வாபஸ் பெறுவது என்று இந்தியாவும் பாகிஸ்தானும் தீர்மானித்துள்ளன.**

1972-ம் ஆண்டு இந்தியப் பிரதமர் காலஞ்சென்ற திருமதி இந்திரா காந்திக்கும் பாகிஸ்தான் பிரதமர் காலஞ்சென்ற ஜுனுப் சுல்பிகார் அலி பூட்டோவுக்குமிடையே செய்து கொள்ளப்பட்ட 'சிம்லா' ஒப்பந்த காலத்திலிருந்த நிலைக்கு இரு நாட்டுப்படைகளையும் திருப்பி அழைப்பதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது என இந்திய-பாகிஸ்தான் வெளிநாட்டுச் செயலாளர்கள் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

பாகிஸ்தான் வெளியுறவுச் செயலாளர் டாக்டர் கானுக்கும்இந்தியவெளியுறவுஅமைச்சர் திரு. எஸ். கே. சிங்கிக்கு மிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போதே மேற் கண்ட முடிவு எடுக்கப்பட்டது.

இரு நாட்டுப் படைகளுக்கு மிடையே மோதலைத் தடுப்பதற்கு இந்த நடவடிக்கை உதவியாயிருக்கும் என்று டாக்டர் கான் தெரிவித்தார்.

இரு நாடுகளுக்குமிடையே ஏற்பட்டுள்ள இந்த இணக்கம் இரு நாடுகளுக்குமிடையே யான உறவில் தோன்றியுள்ள முன்னேற்றத்தைக் காட்டுகிறதுஎனஅரசியல்அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

### பஸ் விபத்தில் 20 பேர் பலி

(ஹராரே)

சிம்பாப்வேயில் இடம்பெற்ற பஸ் விபத்தில் 20 பேர் பலியாகினர் என்றும், 60 பேர் காயமடைந்தனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

## 300 வயது அடையாறு ஆலமரம்வீழ்ந்தது!

(சென்னை)

அடையாற்றில் சென்னை மாநகரின் அடையாத நெடுங் கதவாகத் திகழ்ந்த இந்தியாவின் 2வது மிகப் பெரிய ஆலமரம், கடந்த சனிக்கிழமை பெய்த பெரு மழையினாலும், பலத்த காற்றினாலும் நிலத்தில் வீழ்ந்தது.

40 ஆயிரம் சதுர அடி சுற்றளவில் விழுதுகளைப் பரவி நின்ற இந்த ஆலமரம் 205 அடி சுற்றளவு கொண்டது.

அடையாறு பிரம்மஞான சபை வளவில் கடந்த 300 ஆண்டு காலமாக இந்த ஆலமரம், உல்லாசப் பிரயாணிகளைக் கவர்ந்துவந்தது.

இந்தியாவின் முதலாவது பெரிய ஆலமரம் கல்கத்தாவில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

# கடத்தப்பட்ட ஆப்கான் விமானம் விழுந்து 4பேர் பலி!

## நாடகம் தொடர்கிறது; 12 பேர் பணயக் கைதிகள்

(தெஹ்ரான்)

காபூலிலிருந்து கடத்திச் செல்லப்பட்ட ஆப்கானிஸ்தான் விமானம் ஒன்று ஈரானில் விழுந்ததை அடுத்து அதிலிருந்த பெண் ஒருவரும், அவரது மூன்று பிள்ளைகளும் பலியாகினர். 35 பேர் படுகாயமடைந்தனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானில் உள்ளூர் சேவையில் ஈடுபட்டிருந்த, சோவியத் யூனியனில் தயாரிக்கப்பட்ட 'அன்ரோனேவ்-26' ரக விமானம் ஒன்று 40 பயணிகளுடன் இரண்டு ஆயுததாரிகளால் கடத்தப்பட்டது.

இக்கடத்தலையடுத்து விமானிகளுக்கும் கடத்தல்காரர்களுக்கும் இடையில் ஏற்பட்ட மோதல் காரணமாக விமானம் ஈரானிய நகரம் ஒன்றில் அவசரமாகத் தரை இறக்கப்பட்டபோது தலைகீழாக விழுந்தது என்றும் ஈரானிய செய்தி ஸ்தாபனமான 'இர்னா' தெரிவித்தது.

கடத்தல்காரர்கள் இன்னமும் பயணிகள், விமானச் சிப்பந்திகள் உட்பட 12 பேரைப் பணயக் கைதிகளாக வைத்துள்ளனர் என்றும் மிகுதிப் பயணிகள் விடுவிக்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கடத்தல்காரர்கள் இன்னமும் அடையாளம் காணப்படவில்லை. எனினும் ஆப்கானிஸ்தான் புரட்சிக்காரர்களே விமானத்தைக் கடத்தியிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

## பாடசாலைகளுக்கு கோட்டக் கல்வி அதிகாரிகள் விஜயம்

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்பு கோட்டக் கல்வி அலுவலகக் கல்வி அதிகாரிகள் வாரத்தில் இரு கொத்தணிப் பாடசாலைகளுக்கு நேரிற் சென்று மாணவர்களின் கல்வி அபிவிருத்திபற்றியும், கொத்தணிப் பாடசாலை எதிர் நோக்கும் பிரச்னைகள்பற்றியும் ஆராய்வதற்கான நிகழ்ச்சித் திட்டமொன்றை வகுத்து நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

கோட்டக் கல்வி அதிகாரி திரு. இ. சிவானந்தன் தலைமையிலான கல்விஅதிகாரிகள் குழு அண்மையில் இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் பிரகாரம் காரைநகர் கொத்தணி, சுழிபுரம் கொத்தணி, பண்டத்தரிப்பு கொத்தணி ஆகியவற்றுக்கு நேரில் விஜயம்செய்தனர்.

இக்குழுவினர் நாளை புதன்கிழமை இளவாலை கொத்தணிக்கும், மறுநாள் வியாழக்கிழமையன்று அளவெட்டி கொத்தணிக்கும் விஜயம் செய்யவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## 650 தொழிற்சங்கவாதிகள் கடந்தஆண்டில் படுகொலை!

### உலகநாடுகளில் 6,000 பேர் கைது!!

(பிரஸல்ஸ்)

உலக நாடுகளில் கடந்த ஆண்டு 650தொழிற்சங்கவாதிகள் கொலைசெய்யப்பட்டுள்ளனர் என்றும் 6ஆயிரம் பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் பிரஸல்ஸில் வெளியாகிய சர்வதேச தொழிற்சங்க நிறுவனத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1987ம் ஆண்டைவிட கடந்த ஆண்டு இரட்டிப்புத் தொகையான தொழிற்சங்கவாதிகள் கொலை செய்யப்பட்டுள்ளனர் என்றும் கொலம்பியாவில் தொழிற்சங்கவாதிகள் கொலை செய்யப்படுவதும் காணமற்போவதும் தினமும் இடம்பெறும் சம்பவங்களாகும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கரட், கோவா அமோக விளைச்சல்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் நெடுங்கேணி கமநலசேவை பெரும்பாக உத்தியோகத்தர் பிரிவில் கோவா, கரட் செய்கை பெருமளவில் வெற்றியளித்துள்ளது.

விவசாயப் பகுதியினருடைய ஆலோசனையுடன் செய்கைபண்ணப்பட்ட இந்த பயிர், நெடுங்கேணியில் அமோக விளைச்சலைத் தந்துள்ளதென இப்பகுதி பெரும்பாக உத்தியோகத்தர் திரு. எஸ். முத்துலிங்கம் தெரிவித்தார்.

## சேவைக்கால பயிற்சி வகுப்புகள் ஆரம்பம்

[அராலி]

ஆசிரிய சேவையில் சேருவதற்கு முன் சேவைக்கு முந்திய பயிற்சிவகுப்பில் பங்குபற்றிய ஆசிரியர்களுள் விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சி வகுப்புகள் நேற்று ஆரம்பமாகின.

வடமராட்சி கோட்டக் கல்விப் பாடசாலைகளில் விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்குப் புலோலி வேலாயுதம் மகா வித்தியாலயத்திலும்; வேலணை கோட்டக்கல்விப் பாடசாலைகளில் விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு வேலணை சேர். வைத்திலிங்கம் துரைசாமி ம. ம. வித்தியாலயத்திலும்; மானிப்பாய், வட்டுக்கோட்டை, காங்கேசன்துறை வட்டாரப் பாடசாலைகளில் விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு யாழ். வைத்தீஸ்வர வித்தியாலயத்திலும்; கோப்பாய், சாவகச்சேரி, நல்லூர், யாழ்ப்பாணம் வட்டாரப் பாடசாலைகளில் விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியிலும் மேற்படி சேவைக் காலப் பயிற்சிவகுப்பு நடைபெற்றுவருகிறது. இவ்வகுப்புகள் இம்மாதம் 22ம் திகதிவரை தொடர்ந்து நடைபெறும்.

# 1993-ல் தமிழகத்திற்கு கிருஷ்ணா நதி நீர்

## 83-ம் ஆண்டு திட்ட வேலைகள் உடன்தொடங்கும்என்கிறார் கருணாநிதி

[சென்னை]

ஆந்திராவிலிருந்து பெறப்படும் கிருஷ்ணாநதி நீர் சென்னை மக்களுக்கு 1993ல் விநியோகிக்கப்படும் என்று தமிழக முதல்வர் திரு. மு. கருணாநிதி தெரிவித்தார்.

870 கோடி ரூபா செலவிலான இந்தத் தெலுங்கு கங்கைத் திட்டம் தொடர்பாக ஆந்திர முதல்வர் திரு. என். டி. ராமராவுடன் இறுதிப் பேச்சுவார்த்தைகளை நடத்திவிட்டுத் தமிழகம் திரும்பிய திரு. கருணாநிதி இத்திட்டத்திற்கான நடவடிக்கைகள் உடனடியாக ஆரம்பிக்கப்படுமென்றும் தெரிவித்தார்.

1983ம் ஆண்டு இரு மாநிலங்களுக்கிடையே கைச்சாத்திடப்பட்ட இத்திட்டத்திற்கான அடிக்கல்லை அன்றைய பிரதமர் காலஞ்சென்ற திருமதி இந்திரா காந்தி நாட்டிவைத்தார்.

ஆந்திராவிலிருந்து சென்னை வரை 692 கிலோ மீட்டர் தொலைவுக்குத் திசை திருப்பப்படும் கிருஷ்ணாநதிநீரைத் தாய்மைப்படுத்துவதற்கு மட்டும் 400 கோடி ரூபா செலவிடப்படும் என்றும், இத்திட்டத்திற்குத் தமிழ்நாடு அரசு 251 கோடியையும் ஆந்திரா 619 கோடி பணத்தையும் செலவிடும் என்றும் திரு. கருணாநிதி தெரிவித்தார்.

## ஆர்ப்பாட்டம்

(ஹொங்கொங்)

7 ஆயிரம் வியட்நாம் அகதிகளுக்குத் தஞ்சம் அளிக்கும் ஹொங்கொங் அரசின் தீர்மானத்தை ஆட்சேபித்து சுமார் 5ஆயிரம் மக்கள் நேற்று ஹொங்கொங்கில் ஆர்ப்பாட்டம் செய்தனர். ... இருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## லொறி தீக்கிரை

(வவுனியா)

வவுனியா- யாழ். வீதியில் கடந்தவெள்ளிக்கிழமை இடம்பெற்ற அசம்பாவிதத்தில் தனியார் லொறியொன்று தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

ஓமந்தைக்கு அருகாமையில் இச்சம்பவம் இடம்பெற்றது.

பல லட்சரூபா பெறுமதியான பொருள்களுடன் தீக்கிரையாக்கப்பட்ட இந்த லொறி யாழ்ப்பாண வர்த்தக நிறுவனம் ஒன்றுக்குச் சொந்தமானதென்று கூறப்படுகின்றது.

லொறிச் சாரதிக்கும், கிளினருக்கும் என்ன நடந்துள்ளது பது தெரியவில்லை.

## இடமாற்றம்

(பலாலி)

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் கடந்தபல வருடங்களாகக் கடமையாற்றிய பல்வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி எஸ். பாலசுப்பிரமணியம் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## பொன்னாலையில் மகா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோவிலில் நாளை புதன்கிழமை முற்பகல் மகா கும்பாபிஷேகமும் இதனைத் தொடர்ந்து 45 தினங்கள் மண்டலாபிஷேகமும் நடைபெறவுள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

அகிம்சை என்பது விரிந்த பொருள் பொதிந்த கொள்கை. நாமெல்லோரும் இம்சை என்னும் பெருந்தீயில் அகப்பட்டுத் திக்கற்ற நிலையிலுள்ள மாந்தர்களாவோம்.

- மகாத்மாகாந்தி

## நமது நோக்கு

# ஊசிமருந்துவேலைசெய்யுமா

**1977ல்** ஆட்சிக்கு வந்த ஐ. தே. க. அரசு திறந்த பொருளாதாரக் கொள்கைக்கு வழிவகுத்தது. வெளிநாட்டுக்கடன் தாராளமாக வந்தது. அரசுமயப்படுத்தப்பட்ட சேவைகள், தொழில்களுடன் தனியார் சேவைகளும் தொழில்களும் போட்டிபோட ஆரம்பித்தன.

வெளிநாட்டுப் பொருட்கள் தாராளமாக வந்திறங்கின. மினிபஸ், மோட்டார் சைக்கிள்கள் போன்றவை தெருக்களிற் குவிந்தன. கம்பியூட்டர்கள். அலுவலகச் சாதனங்கள், புதுமையான எலக்ரோனிக் சாதனங்கள் போன்றநவீன உற்பத்திகளும் தாராளமாக மக்களின் கைக்கெட்டின.

தொலைக்காட்சி,வீடியோ எலக்ரோனிக் இசைக்கருவிகள் மக்கள் வாழ்விற்குக் 'கிளு கிளு'ப்பை ஊட்டத் தவறவில்லை. சிங்கப்பூர் மாதிரியில் இலங்கையையும் சொர்க்க பூமியாக்கிக்காட்டுகிறோம் என்று தான் அமைச்சர்களும் சவால் விட்டார்கள். ஓரளவு சொர்க்க பூமியாக இலங்கை காட்சி தந்ததும் உண்மைதான்!

சொர்க்கபூமி ஏற்பட்டால், அதற்கருகில் 'நரக பூமி'யும் உருவாகுமென்பது இயற்கை விதியோ என்னவோ எமக்குத் தெரியவில்லை. ஆனால் 'நரகபூமி'யும் மறைவாக உருவாகித்தான் வந்தது.

தாராளப் பொருளாதாரத்தின் பின் விளைவுகள் எவை? முதலடி உள்ளூர் உற்பத்திக்கு. வெளியிலிருந்து அழகாகப் பொறியிட்டு, பெயரிட்டு, மலிவாக வருவதை விடுத்து, யார்தான் உள்ளூர்ப் பொருளை வாங்க விரும்புவர்? மனித இயற்கையை வெறும் பிரசாரங்களால் மாற்றிவிடலாம் என்றால் அது நாய்வாலை நிமிர்த்த முயன்ற கதையாகிவிடும்.

உற்பத்திச் சமுதாயமாக இருக்கவேண்டிய சமுதாயம் வெறும் நுகர்வுச் சமுதாயமாக மாறிவிட்டது. யார் இந்த நுகர்வோர்? ஏற்கனவே பணம்படைத்தோர், வந்த வாய்ப்பைச் சரியாகப்பயன்படுத்திஇறக்குமதிகளை விற்றுப் புதிய பணக்காரர் ஆனோர்,இடைநிலைத் தரகர்கள் போன்றோர் ஆவர்.

இதைவிட, காணிகளை விற்று, நகைகளை அடமானமாக வைத்து, வெளிநாடுகளுக்குச் சென்று, 'எந்த' வேலையையும் மனம் கோணாமற் செய்து, பாடுபட்டுத் தேடிய பணம் எங்கே? திரைகடலோடித் தேடிய திரவியம் இந்த மண்ணை வளப்படுத்தியதா? இல்லவேயில்லை!

வீடியோ, கமெராக்கள், போன்ற டாம்பீகப் பொருட்களைத் தேடி அன்னிய நாடுகளுக்கே சென்றுவிட்டது. திரைகடலோடித் தேடிய அன்னியச் செலாவணி, திரைகடலோடி அன்னிய நாடுகளுக்கே சென்றது; அங்குள்ளவர்களுக்கே வேலை வாய்ப்பைக் கொடுத்தது.

இதைவிட, வசதிபடைத்தோர் தாராள இறக்குமதிப் பொருட்களைப்பெற்று 'ஷோ' காட்ட, வேலைவாய்ப்பின்றிப் பெருகிய ஏழை மக்கள் பார்த்துப் பெருமூச்செறிய, இதனால் சமுதாயத்திலே ஏற்றத் தாழ்வுகள் அதிகரித்து சமுதாய அரசியற் சிக்கல்களிக்கு வித்திட்டன.

இடையிலே வந்துவிட்ட வட கிழக்கு அரசியற் சூறாவளிகளும், தென்னிலங்கையில் தோன்றிய ஜே. வி. பி. பிரச்னையும் சேர்ந்து சொர்க்க பூமிக்கு ஒரு ஆட்டம் கொடுத்தது. திறந்த பொருளாதாரத்தால் விளைந்த ஒரு சில நன்மைகளும் சிதறுண்டன; தோன்றிய தீமைகளோ பலப்பல.

வந்த உதவிகள் இராணுவச் செலவுக்குப்போக, ஏற்கனவே நொந்த தொழில்கள் தொய்ந்துவிட, வாழ்க்கைச் செலவு அதிகரித்து, பணவீக்கம் மேலேறகுறைந்தளவு உற்பத்திப்பொருட்களைத் தேடி கூடியளவு பணமோட. பொருளாதாரத்தில் பலவீனம் ஏற்பட்டது அன்னியச்செலாவணிப் பற்றுக்குறை, சர்வதேச நிதிநிறுவன உதவி தாமதம் என்ற 'கிருமிகள்' பலவீனமடைந்த பொருளாதாரத்தைப்பற்றிக்கொள்ள வியாதிபெருகிவிட்டது.

எனவேதான், இறக்குமதிவரி அதிகரிப்பு என்ற ஊசிமருந்து ஏற்றப்படுகின்றது. ஊசி ஏற்றும்போது வலு ஏற்படுவது உண்மை அதுபோல் நுகர்வோர் உடனடியாகப் பாதிக்கப்படுவர்; கூக்குரல் எழுப்புவர் ஆனால் ஊசிமருந்து பரந்து, உள்ளூர் உற்பத்தியை ஊக்குவித்தல், வேலைவாய்ப்பு அதிகரித்தல் போன்ற விளைவுகளை ஏற்படுத்துமாயின் நாட்டுக்கு நன்மையே!

# குடிநீர்த்தன்மையில் மாற்றம் ஏற்படுகிறதா?

(சுன்னாகம்)

நல்ல தண்ணீருக்குப் பெயர்பெற்ற கொல்லங்கலட்டி, கிளானை, கலட்டி, மாவிட்டபுரம் ஆகியஇடங்களைச்சேர்ந்த கிணறுகளில் தற்போது தண்ணீரின் தன்மை மாற்றமடைந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிமெந்துத் தொழிற்சாலைக்காகக் கல் அகழ்ந்து எடுக்கப்படும் கிடங்குகள் கிணறுகளின் ஆழத்திற்குக் கீழே சென்றுவிட்டதால் நிலத்தின் கீழ் ஊற்றுக்களில் ஏற்பட்டமாறுதலே இந்தத் தண்ணீரின் தன்மை மாற்றத்திற்குக் காரணமாகக் கூறப்படுகிறது.

பாதிக்கப்பட்ட [illegible] குழாய்க்கிணறுகளை [illegible] வருகின்றனர்.

# யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தின் நிவாரண உதவிகள்

## ஆண்டறிக்கையில் தகவல்

[யாழ்ப்பாணம்]

''எமது சங்கத்தின் நிதி நிலைமை எமது நடவடிக்கைகளுக்குப் போதுமானதாக இருக்கவில்லை. இதனால்தான் நல்லமுறையில் இயங்கமுடியவில்லை. எனினும் எமது தேவைகளுக்காகச் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், இந்திய செஞ்சிலுவைச் சங்கம், றெட்பானா, ஒக்ஸ்பாம் என்பன பெருமளவில் நிதியுதவி வழங்கின'' என்று இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்ப்பாணப் பிரிவின் 88-89ம் ஆண்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கை மேலும் கூறுவதாவது:-

''கஷ்டமான நிலைக்குத் தள்ளப்பட்ட 10,500மீனவ குடும்பங்களுக்கு அரிசி, மா, சீனி மண்ணெண்ணெய் என்பனவற்றை வழங்கினோம். மரணித்த அல்லது அங்கவீனரானவர்களில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஏழாயிரம் குடும்பங்களுக்கு துணி, உடுபிடவைகளை வழங்கினோம். இந்த உதவிகளை விரைவில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களில் வழங்கவிருக்கிறோம்.

''பூஸா, வெலிக்கடை தடுப்பு முகாம்களில் உள்ளவர்களுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் உதவினோம்''.

# 238 ஆலயங்களை தரிசிக்கும் வலி. வடக்கு திருத்தல யாத்திரை

(வண்ணார்பண்ணை)

ஆத்மஜோதி நா. முத்தையாவின் தலைமையில் வடபகுதியில் பரவலாக நடத்தப்பட்டுவரும் ஆத்மீக ஈடேற்றத்திற்கான திருத்தல பாதயாத்திரை வலிவடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பக்திமயமாக ஆரம்பமானது தொடர்ந்து பத்துத்தினங்கள் நடக்கும் இப்பாதயாத்திரை இம்மாதம் 27ம் திகதியுடன் நிறைவுபெறுகிறது.

அளவெட்டி தெற்கு மாரியம்மன் கோவிலிலிருந்து ஆரம்பமாகும் இத்திருத்தல யாத்திரை முதல்நாளிலேலே இப்பகுதியில் உள்ள இருபத்திமூன்று ஆலயங்களைத் தரிசிக்கின்றது. தினமும் காலை 7-30 மணிமுதல் மாலை 6 மணிவரை நடைபெற்று நிறைவுபெறும், வலிகாமம் வடக்குப்பகுதியில் உள்ள 238 ஆலயங்களை இப்பாதயாத்திரை தரிசிக்க விருக்கிறது.

இத்திருத்தல யாத்திரை தொடர்பான நிகழ்ச்சி நிரல் அடங்கிய பிரசுரம் ஒன்றை தெல்லிப்பளை இந்து இளைஞர் மன்றம் அச்சிட்டு வெளியிட்டுள்ளது.

நாட்டின் இன்றைய சூழ்நிலையில் மக்களின் மனதில் அமைதியையும், ஆனந்தத்தையும் ஏற்படுத்தவும், பக்தி உணர்வையும், கோவில் பழக்கத்தையும் இளைஞர்களிடையே ஏற்படுத்தவும் அரன் நாமமே சூழ்ந்து வையம்துயர் தீரவும் இப்புனித யாத்திரையை நடத்துவதாக இது தொடாபான அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆங்கில ஆசிரியர் பட்டியல்

(யாழ்ப்பாணம்)

ஓய்வுபெற்ற உத்தியோகத்தரிடமிருந்து கோரப்பட்ட ஆங்கில ஆசிரியர்களுக்கான 300 விண்ணப்பங்கள் யாழ். கல்வித் திணைக்களத்திற்கு வந்துசேர்ந்துள்ளன.

இதனைத் தொடர்ந்து ஆரம்ப வகுப்பு மாணவர்களுக்கும், உயர்வகுப்பு மாணவர்களுக்கும் தேவையான ஆங்கில ஆசிரியர்களுக்கான பட்டியலை யாழ். கல்வித் திணைக்களம் திரட்டத் தொடங்கியுள்ளது.

# இணுவில் கந்தசுவாமி கோவில் திருமஞ்சம்

(யாழ்ப்பாணம்)

இணுவில் கந்தசுவாமி கோவில் 12ம் திருவிழாவையொட்டி இன்று செவ்வாய்க்கிழமை பகல் விசேட அபிஷேக ஆராதனைகளும் பிற்பகல் 4 மணிக்கு திருமஞ்சத்தில் சுவாமி எழுந்தருளலும் நடைபெறும்.

இந்த ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் கடந்த 9ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது. அடுத்த மாதம் 2ம் திகதி காலை தேர் உற்சவமும், மறுநாள் பிற்பகல் 4 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது.

# அந்தோனியார் திருவிழா

(மன்னார்)

மன்னார் தள்ளாடி புனித அந்தோனியார் திருவிழா பெருவிழாவாக நடைபெற்றது. என்றுமில்லாதவாறு மக்கள் கூட்டம் அதிகமாக இருந்தது. திருவிழா திருப்பலியை மன்னார் மாவட்ட குருகுல முதல்வர் அருட்திரு அ. சேவியர் குரூஸ் நிறைவேற்றினார்.

திருப்பலி முடிவுபெற்றதும் திருச்சொரூப பவனி இடம்பெற்றது.

இதேபோல் துவரக்கேணி, சிறுதோப்பு, உவரி பள்ளகண்டல் போன்ற கிராமங்களிலும் [illegible] நடைபெற்றன.

# 'எமது மதிய உணவுக்கு ரூ. 75 அறவிடுக!'

## எம். பி. கோரிக்கை

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் உள்ள எம். பிக்களின் உணவுச்சாலையில் அவர்களுக்கு வழங்கப்படும் உணவுக்கும் தேநீருக்கும் மிகவும் குறைந்த கட்டணமே வசூலிக்கப்படுகிறது என எம். பி. ஒருவரே புகார் செய்துள்ளார்.

எம். பிக்களுக்கு வழங்கப்படும் ஒரு நாளை மதிய உணவுக்கு 75 ரூபாவும் தேநீருக்கு 5ரூபாவும் அறவிடவேண்டும் என களுத்துறை மாவட்ட எம்.பி. டாக்டர் நெவில் பெர்னாண்டோ பாராளுமன்ற செயலாளர் நாயகத்திற்கு கொடுத்த புகாரில் தெரிவித்துள்ளார்.

14 ஆயிரம் ரூபா படியையும் ஏனைய சலுகைகளையும்பெறும் எம். பி. ஒருவருக்கு மேற்படி கட்டணம் சிறுதொகையே!! என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கோழிக்கறி, மீன், ஆட்டிறைச்சி ஆகியன எமக்கு உணவாக வழங்கப்படுகிறது. கடந்த மாதம் எனது சாப்பாட்டுக்கும் தேநீருக்குமான 56 ரூபா 60 சதம் மட்டுமே கட்டணமாகப் போடப்பட்டுள்ளது. இது மிகமிகக் குறைவு என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# சுயதொழில் முயற்சிக்கு இலங்கை வங்கி கடனுதவி

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கியினால், வறுமை ஒழிப்புத்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கும் சுயதொழில் வேலைவாய்ப்புச் சம்பந்தமான கருத்தரங்கு வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

இக் கருத்தரங்கில் சுயதொழில் முயற்சிக்குக் கடன் வழங்குவது சம்பந்தமாக இரு திட்டங்கள் தெரிவிக்கப்பட்டன.

முதலாவது திட்டமாக உணவு முத்திரை பெறுபவர்களுக்கு 500 ரூபாவிலிருந்து 3000 ரூபா வரை சுயமாகத் தொழில் தொடங்குவதற்காக இலங்கை வங்கியிடமிருந்து கடன்பெற்றுக்கொள்ளலாமென்றும் 36 மாதங்களில் இக்கடனை கட்டிமுடிக்கவேண்டுமென்றும் 16 வீதமான வட்டி இப்பணத்திற்கு அறவிடப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டது.

இரண்டாவது உணவு முத்திரை பெறுபவர்களானாலும், பெறாதவர்களானாலும் சரி 5,000 ரூபா தொடக்கம் 2,500 ரூபா வரை கடன் பெறலாம் என்றும் ஐந்துவருடகாலத்துக்குள் இப்பணம் கட்டிமுடிக்கவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பணத்திற்காக 19 வீத வட்டி அறவிடப்படுமென்றும் இந்த இருவகையான கடன் திட்டங்களும் யார் யாருக்கு வழங்கப்படுமென்பதை அரசசார்பற்ற நிறுவனங்கள் தீர்மானிக்கவேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டது.

# தொழில் நுட்ப ஆய்வுக்கு புதிய தகவல் நிலையம்

(கொழும்பு)

கைத்தொழில் மற்றும் தொழில்நுட்ப தகவல்சேவைக்கான புதிய நிலையமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

புடவைக் கைத்தொழில், கிராமியக் கைத்தொழில் அமைச்சர் திரு. தொண்டமான் அமைச்சுக் காரியாலயத்தில் இதனை ஆரம்பித்துவைத்தார்.

வெள்ளவத்தையில் பழைய நெசவாலைக் கட்டிடத்தில் இயங்கவுள்ள இந்த நிலையம் ஒரு இயக்குநரையும், ஒரு மேல

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மனித உரிமை மீறல் குறித்து 2 ஆண்டில் 1138 வழக்குகள்

[கொழும்பு]

அடிப்படை மனித உரிமை மீறல்கள், ஜனநாயக சட்ட விரோத மீறல்கள் தொடர்பாக அரச உயர்மட்ட அதிகாரிகளுக்கு எதிராக ஆயிரத்து 138க்கும் அதிகமான வழக்குகள் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

1987ம் ஆண்டு ஜூன் மாதம் தொடக்கம் இன்றுவரை தாக்கல் செய்யப்பட்டுள்ள இவ் வழக்குகளில் பெருமளவு இதுவரை தீர்க்கப்படவில்லை என்று மனித உரிமைகள் பாதுகாப்பு, அபிவிருத்தி தொடர்பான சம்மேளனமொன்றின் உறுப்பினரான பிரபல சட்டத்தரணி ஒருவர் கவலை தெரிவித்துள்ளார்.

பொலிஸ் தாக்குதல், சட்ட விரோத கைது, சித்திரவதை, ஜனநாயக விரோத செயல்கள், மனித உரிமை மீறல், அரச அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தல், அத்துமீறி காணிகளை சுவீகரித்தல் தொடர்பான பல வழக்குகள் இதில் அடங்குகின்றன.

# 5 மாதங்களில் 4,500 பேர் பலி!

(கொழும்பு)

நாடு முழுவதிலும் கடந்த ஐந்து மாதங்களில் சுமார் 4500 பேர் கொல்லப்பட்டுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கொல்லப்பட்டவர்களில் 2,220 பேர் தீவிரவாதிகளால் கொல்லப்பட்டதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

# டிப்ளோமா பயிற்சிநெறிக்கு விண்ணப்பம் கோரப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழக இராமநாதன் நுண்கலைக் கழகம் இசை, நாட்டிய 'டிப்ளோமா' பயிற்சி நெறிகளைப் பயில விரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பிப்பவர் க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் ஓரே முறையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இவற்றில் கர்நாடக சங்கீதம் அல்லது பரதநாட்டியம் ஒரு பாடமாக இருத்தல் அவசியம் அல்லது க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருப்பதுடன் வட-இலங்கை சங்கீத சபையினரின் சங்கீதம், நடனம் முதலியவற்றில் நாலாந்தரத்தில் சித்தியடைந்திருக்க வேண்டும். 25 வயதுக்குட்பட்டவர்களே இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்க முடியும்.

# வவுனியாவில் இளைஞர் சுட்டுக்கொலை

(வவுனியா)

வவுனியா நகர தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு மன்னார் வீதியில் இந்த சம்பவம் நடந்துள்ளது. 24 வயதான செல்வக்குமார் என்ற இளைஞனே மரணமானவர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# இப்படியும் நடக்கிறது

யாழ்ப்பாணம் காளிகோவிலுக்குச் சமீபமாக ஒரு வீடு.

இரவு நேரம். ஒரே புழுக்கமாக இருந்ததால், அறை ஜன்னல் கதவைதிறந்து வைத்துவிட்டு, அயர்ந்து தூங்கிவிட்டார் அந்த வீட்டுக்காரப் பெண்.

வீட்டை நோட்டம் விட்ட ஒரு ஆசாமியின் கண்ணில் பெண் அணிந்திருந்த காப்பு பட்டுவிட்டது. 'முன்னேற்பாடு'டன் வந்த அந்த ஆசாமி ஜன்னல் ஊடாக ஒரு குறடை விட்டு மெதுவாக ஒரு காப்பை நறுக்கி, நைஸாக அபேஸ் செய்துவிட்டார். ஆசை யாரைவிட்டது? அந்தப் பெண் ஆழ்ந்த தூக்கத்தில் இருப்பதைக்கண்டு, அடுத்த கையிலிருந்த காப்பிலும் கண்வைத்து குறடால் வெட்ட முயன்றபோது, அந்தப் பெண் விழித்து விட்டார்!

ஆளைவிட்டால் போதும் என்று ஒரு காப்புடன் ஓடி மறைந்து விட்டார் அந்த ஆசாமி!

அது சரி... இதில் என்ன விசேஷம்? திருடப்பட்ட அந்தக் காப்பு தங்க வளையல் அல்ல. அது ஒரு 'கிலிற்' காப்பு!

"ஊடுருவி"

# 'இந்திய வம்சாவழி மக்கள் ஒன்றுபடவேண்டியது அவசியம்

## தொண்டமான் அழைப்பு

(பண்டாரவளை)

வடக்கு-கிழக்கில் இடம் பெற்ற சம்பவங்கள் போன்று மலைநாட்டிலும் நிகழாமல் இருப்பதை நிச்சயிக்கும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

இவ்வாறு புடவைக் கைத்தொழில் சிறுகைத்தொழில் அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் தெரிவித்தார்.

பண்டாரவளை 'கிரேக்' தோட்ட தமிழ் பாடசாலையில் புதிய கட்டிடம் ஒன்றைத் திறந்து வைத்துப் பேசுகையில் திரு. தொண்டமான் மேலும் கூறியதாவது:

இந்திய வம்சாவளியினர் முன் எப்போதும் இல்லாதவாறு ஒன்றுபட வேண்டிய அவசியம் இன்று ஏற்பட்டுள்ளது.

வன்செயல்கள் மூலம் மக்களின் நாளாந்த வாழ்க்கையில் பிரச்னைகளை ஏற்படுத்த முயலும் சக்திகளுக்கு தோட்டத் தொழிலாளர்களும் இந்திய வம்சாவளியினரும் ஆதரவளிக்கக்கூடாது.

# ஒரு லட்சம் மரக்கன்றுகள் நாட்ட சமாஜம் முடிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தின் சகல பகுதிகளிலும் ஒரு லட்சம் மரக்கன்றுகளை நாட்டுவதற்கு யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாஜம் தீர்மானித்துள்ளது.

யாழ். பிரெஞ்சு நட்புறவுச் சங்க மண்டபத்தில் நடைபெற்ற யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனப் பொதுச்சபைக் கூட்டத்தில் மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்திற்கு யாழ். உதவி உள்ளூராட்சி ஆணையாளர் சமுகம்தராதபடியால், சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி த. பாஸ்கரன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மேலும் எடுக்கப்பட்ட தீர்மானங்களாவன: மரக்கன்றுகளை மேடையில் நாற்றிட்டு வளர்ப்பவர்களுக்கு ஊக்குவிப்புப் பணம் வழங்கப்படும். இதற்காக மரக்கன்று நாற்று மேடைகள் உள்ள இடங்களின் விபரங்கள் சேகரிக்கப்படும்.

வெளிநாட்டிலிருந்து யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களுக்கு வரும் நிதிகளைச் சனசமூக நிலைய சம்மேளனம் திட்டமிடுகின்ற அபிவிருத்தி வேலைகளுக்கே பாவிக்கப்படும். சம்மேளனக் கூட்டங்களுக்கு தவறாது வரும் உறுப்பினர்களுக்கு 'அலவன்ஸ்' வழங்கப்படும்.

மேற்படி சம்மேளனக் கூட்டத்திற்கு யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்த ஐம்பதிற்குமதிகமான பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

# கூடிய விலையில் டிக்கெட்டுகள்?

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குச் செல்வதற்குரிய பிரயாணச்சீட்டுக்கள் யாழ். புகையிரதப் பகுதிகளில் வைத்துக்கூடிய விலைக்கு விற்கப்படுவதாக பிரயாணிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

கொழும்புக்குச் செல்லும் பிரயாணிகளுக்குரிய டிக்கெட்டுகள் பிரயாணத்துக்கு முதல் நாளே யாழ். புகையிரத நிலையத்தில் விற்கப்படுகிறது. இதனைச்சாதகமாகப்பாவித்து அவ் டிக்கெட்டுகளை வாங்கி வைத்திருந்து பின்னர் அவைகளை பிரயாணிகளுக்குக் கூடுதல் விலைகளுக்கு விற்கிறார்களாம்.

# 12,000 குடும்பங்களுக்கு உணவு முத்திரை

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் புதிய உணவு முத்திரைகள், உணவு முத்திரை பெறத் தகுதியுள்ள சுமார் 12 ஆயிரம் குடும்பங்களுக்கு அவ்வப்பகுதி கிராம சேவை அலுவலர்களினால் அண்மையில் வழங்கப்பட்டுள்ளன.

சண்டிலிப்பாய் பதில் உதவி அரசாங்க அதிபர் திரு. து. வைத்திலிங்கம் மேற்பார்வையில் இந்த உணவு முத்திரைகள் வழங்கப்பட்டுள்ளன.

# 'எக்ஸ்றே' எடுக்க இடம்மாறும் நோயாளிகள்

(சுன்னாகம்)

பழுதடைந்துள்ள எக்ஸ்-றே யந்திரம் திருத்தப்படாத காரணத்தால் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் நோயாளர்கள் அம்புலன்ஸ் மூலம் மயிலிட்டி மார்பு நோய் சிகிச்சை நிலையத்திற்கு படம் பிடிப்பதற்காகக் கூட்டி செல்லப்படுகின்றனர்.

இதனால் சுகாதாரப் பகுதியினருக்கு சிரமமும், அதிக செலவும் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

பூநகரிக்கு யாழ். செஞ்சிலுவைச் சங்கம் சில உடுபுடைவை பார்சல்களை அனுப்பியுள்ளது.

இப்பகுதி உதவி அரசாங்க அதிபர் மூலம் இப்பார்சல்கள் அப்பதி மக்களுக்கு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

# 86-ல் ஆர்ப்பாட்டம்; இன்று நடவடிக்கை

## மலையகத் தொழிலாளர் அதிருப்தி

(கொழும்பு)

மூன்று வருடங்களுக்கு முன் ஆர்ப்பாட்டம் நடத்திய தமிழ் தோட்டத் தொழிலாளர்களை பொலிசார் எதுவித விசாரணையும், பிடியாணையும் இன்றி கைது செய்து நீதிமன்றில் நிறுத்துகிறார்கள். இந்நடவடிக்கைகள் குறித்து மலையக மக்கள் அதிருப்தி அடைந்துள்ளனர்.

1983ம் ஆண்டு ஜுலை கலவரங்களின்போது இடம்பெற்ற கொலைகள், சூறையாடலுக்கு எதிராக எதுவித நடவடிக்கையையும் எடுக்காத பொலிசார் 1986ம் ஆண்டு தோட்டத் தொழிலாளர் நடத்திய ஒரு ஆர்ப்பாட்டத்தைக் காரணம் காட்டி தொழிலாளர்களைக் கைது செய்வதையும் நீதிமன்றில் வழக்கு தொடர்வதாயும் மலையகத் தொழிலாளர் முன்னணி கண்டித்துள்ளது.

# பொலிஸ் உத்தியோகத்தர் வெற்றிடங்கள்: 700 விண்ணப்பங்கள்: 52

(யாழ்ப்பாணம்)

வவுனியா பொலிஸ் அத்தியட்சகர் பிரிவிலுள்ள ஏழு பொலிஸ் நிலையங்களில் வெற்றிடமாகவுள்ள எழுநூறு பொலிஸ் உத்தியோகத்தர் பதவிக்கு ஐம்பத்திரெண்டு பேர் மட்டும் விண்ணப்பித்துள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் முஸ்லிம்கள் இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை விரைவில் நடைபெறவுள்ளது.

# "தொழிலாளர் நற்பண்பே ஸ்தாபனத்தின் அடிக்கல்"

[மட்டுவில்]

''தொழிலாளர்களின் நன்நம்பிக்கை, உண்மை, நேர்மை, ஒத்துழைப்பு, சுயநலமற்ற கொள்கை, ஒன்றுபட்ட உழைப்பு, சகோரத்துவம் ஆகிய நற்பண்புகளே ஒரு தாபனத்தின் வளர்ச்சிக்கு அடிக்கல்லாக அமைகிறது''.

இவ்வாறு சாவகச்சேரி தெங்கு பனம்பொருள் உற்பத்தி, விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. பொ. சின்னராஜா, சாவகச்சேரி தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய இயக்குநர் சபைத் தெரிவின்போது கூறினார்.

(6-ம் பக்கம் பார்க்க)

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலைவாய்ப்பினைப் பெறுவதற்கான கம்பியூட்டர் கல்வி

DIPLOMA IN DATA PROCESSING AND COMPUTER PROGRAMMING IN BASIC LANGUAGE

ஆரம்பம்: 24 - 6 - 89 (சனி, ஞாயிறு) வகுப்புகள்
பயிற்சிக்காலம்: 3 மாதம்

சேரும்போது செலுத்தவேண்டியது 500 மாத்திரம். O/L படித்த இருபாலாரும் சேரலாம். குளிரூட்டப்பட்ட அறையில் கூடிய நேர செய்முறைப்பயிற்சி. IBM (COMPATIBLE) கம்பியூட்டரில் வழங்கப்படும். பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும். குறிப்பிட்ட தொகை மாணவ, மாணவியரே சேர்க்கப் படுவார்களாகையால் விண்ணப்பப்படிவத்தை பெற்றுப் பதிவு செய்து கொள்ளவும்.

விண்ணப்ப முடிவு திகதி: 23 - 6 - 89.

UNIKCO COMPUTER CENTRE

No. 5, மின்சாரநிலைய வீதி, [2-ம் ஒழுங்கை], யாழ்ப்பாணம்.
(உப தபாற்கந்தோர் அருகாமை) (எ-285)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# "சிறந்த தொழில்நுட்ப வல்லுநர்களை உருவாக்க உதவும் நிறுவனம்"

(யாழ்ப்பாணம்)

தமிழ்ப் பிரதேசங்களின் தொழில் மற்றும் தொழில் நுட்ப வளர்ச்சியை நோக்கமாகக்கொண்டு இயங்கிவரும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி தொழில்நுட்ப நிறுவனத்தில் விதந்து குறிப்பிடத்தக்க வசதிகளுடன் கூடிய நவீன குடிசார் பொறியியல் ஆய்வுக்கூடம் ஒன்று புதிதாக அமைக்கப்பட்டுள்ளது மேலும் சிறந்த தொழில் நுட்பவல்லுநர்களை உருவாக்க இந்த ஆய்வுகூடம் பேருதவியாக இருக்கும்.''

இவ்வாறு மேற்படி நிறுவனத்தில் இடம்பெற்ற கட்டடத் திறப்பு விழாவுக்குத் தலைமைவகித்த நிறுவனத்தின் பதில் பணிப்பாளர் திரு. எஸ். ஏ. பி. துரைரத்தினம் தெரிவித்தார்.

நெதர்லாந்தில் இயங்கும் திருச்சபைகளுக்கு இடையிலான இணைப்பு நிலைய உதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட ஆய்வுகூடத்தையும்,விடுதியையும் இந்நிலையத்தின் ஆசிய பசுபிக் பிரிவைச் சேர்ந்த திரு. லென்னுட் றாபோஸ் திறந்துவைத்தார்.

திரு.துரைரத்தினம் மேலும் பேசுகையில் கூறியதாவது;

''தமிழ்ப் பிரதேசங்களின் தொழில்நுட்ப வளர்ச்சிப் பாதையில் இத்தொழில்நுட்ப நிறுவனம் பலவற்றிலும் முன்னேறி வருகிறது. இதன் அடையாளமாகவும், வளர்ந்துவரும் தேவைகளை ஈடுசெய்யுமுகமாகவும் இந்த இரு கட்டிடங்களும் திறந்துவைக்கப்பட்டன

புதிய பொறியியல் ஆய்வுகூடம் மண் ஆயவு, கட்டிடப் பொருள் ஆய்வு என்பவற்றுக்கான கருவிகளையும் வரைதல் அலுவலகம், கணனி நிலையம் என்பவற்றையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

இத்தொழில்நுட்ப நிறுவனம் இயந்திரவியல், மின்னியல்,குடிசார்,கணனி போன்ற 14 பயிற்சி நெறிகளை நடத்தி வருகிறது.

திறந்துவைக்கப்பட்ட குடிசார் பொறியியல் ஆய்வுகூடத்தின் ஒரு தோற்றமே மேலே உள்ள படத்தில் காணப்படுகிறது.

# இராசி பலன்

**20-06-1989**

பிரதமை பகல் 12-10வரை, பூராடம் பி. இ. 5-15 வரை, இராகுகாலம் 2- 54 முதல் 4–28 வரை, சித்தயோகம், கரிநாள், அசுபதினம்.

மேடம்: குடும்பத்தில் சுபகாரியம், அதிகாரிகள் பாராட்டு, தொழில் லாபம், எதிர்பாராத பயணம், புகழ்.

இடபம்: கொடுக்கல் வாங்கல் பிணக்கு, தொழில் குறைவு, அலைச்சல், காரிய தாமதம், மனச்சுமை.

மிதுனம்: கவலையீனம், கண்ணியக்குறைவு, பணச் செலவு, குடும்பத்தில் பிணக்கு, போராட்டம்.

கடகம்: எண்ணியது கைகூடும், குடும்பசுகம், தொழில் முயற்சி, சகோதரர் உதவி

சிங்கம்: புதிய முதலீடு, வாகனசுகம், பொருள்வரவு, மக்களால் புகழ், பாராட்டு.

கன்னி: சிறுபிணி, அதிகாரிகள் தொல்லை, குடும்பத்தில் பூசல், பயணங்களால் செலவு.

துலாம்: துயரமான செய்தி, அந்நியவாசம், தாய்வழி நினைவு, பிதுர் காரியம், அதிகாரம்.

விருச்சிகம்: காயப்படுதல், மனைவியால் பிணக்கு, குரு தரிசனம், வேலைப்பளு, அதிக கவலை.

தனுசு: குளம்பிய நிலை, ஏமாற்றம், பணம் தவறுதல், குடும்பசந்தேகம், அலைச்சல்.

மகரம்: திருமணப் பேச்சுக்கள், பணவரவு, தொழில் லாபம், பெண் சிநேகம். நண்பருதவி.

கும்பம்: காதல் தோல்வி, பணமுடை, பெரியோர் பகை, வாக்குவாதம், குடும்பப்பிரிவு, கவலை.

மீனம்: ஏமாற்றம், வழி தவறுதல், குறைகூறுதல், மனக்கஷ்டம், குடும்பசுகம், பெரியோர சகாயம்.

# 50,000 கையெழுத்துடன் ராஜீவுக்கு மகஜர்

[வவுனியா]

தமிழ்மக்களைப் பாதுகாக்க இலங்கைவந்துள்ள இந்திய அமைதிப்படையினரைவாபஸ் பெறக் கூடாது எனக்கோரி 50 ஆயிரம் பேர் கையொப்பமிட்ட மகஜர் ஒன்று இந்தியப் பிரதமர் திரு.ராஜீவ்காந்திக்கு அனுப்பிவைப்பதற்காக அமைதிப்படை அதிகாரிகளிடம் வைபவரீதியாக வவுனியாவில் கையளிக்கப்பட்டுள்ளது.

வவுனியா அமைதிப்படை பிரிகேடியர் தினேஸ் சௌகானிடம் இந்த மகஜர் கையளிக்கப்பட்டுள்ளது.

ஈ. பி. ஆர். எல். எவ், ஈ. என். டி. எல். எவ்., ரெலோ பிரதிநிதிகள் இந்த மகஜரை கையளித்தனர் என சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் கூறின.

## தொழிலாளர்

(5-ம் பக்கத்தொடர்ச்சி)

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. அல்போணிஸ் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் ஐந்தாவது முறையாக திரு. பொ. சின்னராஜா தலைவராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

# 'மினிசினிமா இயங்க அனுமதிவேண்டும்'

## மினி சினிமா சங்கம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

''மினி சினிமா தியேட்டர்கள் தொடர்ந்து இயங்காமல் இருப்பதனால் இதனை நம்பி வாழ்க்கை நடத்தும் நாம் அனைவரும் மீண்டும் வறுமைக் கோட்டுக்குள்ளே வாழவேண்டிய நிலை உருவாகும்'' என்று யாழ். மாவட்ட மினி சினிமா சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது: ''மினி சினிமா உரிமையாளர்கள் யாவருவே போதிய வசதி படைத்தவர்களாக இல்லாததால் மினிதியேட்டர்கள் இயங்காத காரணத்தினால் உரிமையாளரும் கஷ்டப்பட்டு தொழிலாளர்களும் கஷ்டப்படவேண்டிய நிலையேற்படும். எனவே சம்பந்தப்பட்டவர்கள் எம்மீது கருணை கூர்ந்து எமது மினி சினிமாவை தொடர்ந்து இயங்க அனுமதி வழங்க வேண்டும்.

''எமது தியேட்டர்கள் இயங்காமையினால் ரி. வி. டெக் உரிமையாளர்கள் எதேச்சையாகவும், சுதந்திரமாகவும் கண்ட கண்ட இடங்களில் வைத்து படம்காட்டி வசூல் பெறுகின்றார்கள். இது கட்டுப்பாடற்ற முறையில் இயங்குவதனால் எமது சமுதாயமே சீரழியக்கூடிய நிலை உருவாகும்.

''மினிசினிமா நடத்துவதற்காக நாம் பட்ட கடனுக்கு இன்று வட்டிகட்டமுடியாத நிலையிலிருக்கிறோம். எனவே சம்பந்தப்பட்டவர்கள் எமது [illegible] வாகவேண்டுகிறோம்',

# இளைஞரின் சடலம் அடையாளம் காணப்படவில்லை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட இளைஞர் ஒருவரின் சடலம் நேற்று வரை அடையாளம் காணப்படவில்லை.

கிளிநொச்சியில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் பலியான இவரின் சடலம் அடையாளம் காணப்படாத நிலையிலே மரண விசாரணை நடைபெற்றுள்ளதாகத்தெரிவிக்கப்பட்டது.

## மாவட்ட பாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

'சமாதானம்' என்னும் கருப்பொருளை மையமாகக் கொண்ட வழிகாட்டிகளுக்கான பாட்டுப்போட்டி மாவட்ட ரீதியில் அண்மையில் வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

இப்போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரி முதலாம் இடத்தையும், மானிப்பாய் மகளிர் கல்லூரி இரண்டாம் இடத்தையும்,வேம்படி மகளிர் கல்லூரி மூன்றும் இடத்தையும் பெற்றன.

## குடிநீர் தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

மந்துவில் பகுதியில் உள்ள இரு வீட்டுத் திட்டங்களிலும் வாழும் 75க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் கடந்த மூன்று வருடங்களாக குடி நீருக்கு அவஸ்தைப் படுகின்றனர்.

குடிநீருக்காக இப்பகுதி மக்கள் சுமார் அரை மைல் தூரம் செல்ல வேண்டிய நிலையில் உள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கது.

## பயிற்சி வகுப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் கிராமசேவை அலுவலர்களாக பதவிமாற்றம் செய்யப்படும் பயிர்ச்செய்கை அலுவலர்கள் விவசாய விஸ்தரிப்பு சேவையாளர்களுக்கான மூன்றுநாள் பயிற்சி வகுப்பு நடைபெற்றது.

இவ் வகுப்பு மன்னார் தலைமைப்பீட உதவிஅரசாங்க அதிபரினால் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

பயிற்சியில் பிரிவு உதவி அரசாங்க அதிபர்கள் உட்பட மாவட்ட உயர்அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

## நன்கொடை வழங்கப்படவில்லை

[யாழ்ப்பாணம்]

யாழ் மாவட்டத்திலுள்ள சனசமூக நிலையங்களில் பல நன்கொடைப் பணத்தை இன்னமும் பெற்றுக்கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

1988ம் ஆண்டுக்கும்அதற்கு முன்னைய காலப்பகுதிக்கும் உரிய நன்கொடைப் பணமும் சில நிலையங்களுக்கு இன்னமும்வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

## மாணவர் கல்வி அபிவிருத்தி

[பருத்தித்துறை]

பெற்றோர்கள் பிள்ளைகளைப் பாடசாலைகளுக்கு அனுப்பிவிட்டால்மட்டும் போதாது. பிள்ளைகளின் ஒவ்வொரு நடவடிக்கைகளையும் கண்காணித்துக்கொள்ளவேண்டும். பெற்றோர்கள் ஆசிரியர்கள் நலன் விரும்பிகள் இணைந்து ஒரு குடும்பம் போல் செயற்படும் போதுதான் மாணவர்களின் கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகளை மேம்படுத்தமுடியும்.

இவ்வாறு அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்கவருடாந்த பொதுக்கூட்டத்திற்குத் தலைமைதாங்கிஉரையாற்றிய வித்தியாலய அதிபர் திரு. எஸ். செல்வராஜா குறிப்பிட்டார்.

தொடர்ந்து அதிபர் உரை நிகழ்த்துகையில் இன்றைய நிலையிலே மாணவர்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு அரசாங்கத்தை மட்டும் நம்பியிராது நாம் எம்மாலான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவேண்டும். என்றார்.

## தொலைபேசி வசதி கோரப்படுகிறது

[யாழ்ப்பாணம்]

யாழ். போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் மகப்பேற்று வைத்தியர்களின் வீடுகளுக்கு தொலைபேசி வசதி செய்து தருமாறு ஆஸ்பத்திரி வட்டாரங்களில் கேட்கப்படுகிறது.

இரவு நேரங்களில் வைத்தியசாலையில் கடமைபுரியும் மகப்பேற்று தாதிமார்கள் அவசரதேவைகள் ஏற்படும் போது மகப்பேற்று வைத்தியர்களிடம் அது சம்பந்தப்பட்ட ஆலோசனை கேட்பதற்காகவே தொலைபேசி வசதி வேண்டும் என கேட்டுள்ளார்கள்.

## நேர்முகப் பரீட்சை

[பருத்தித்துறை]

சமூகசேவைகள் அமைச்சினால் நியமிக்கப்படவுள்ள சமூக சேவைகள் அலுவலர் தரம் இரண்டுக்கான நேர்முகப் பரீட்சைகள் இம் மாத இறுதியில் நடத்தப்படவுள்ளதாக சமூக சேவைகள் பணிப்பாளர் திரு. டி. ஜே. விஜய சுந்தர அறிவித்துள்ளார்.

இப்பதவிகளுக்கு விண்ணப்பித்தவிண்ணப்பதாரிகளுக்கு நேர்முகப் பரீட்சைக் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## மின்விநியோகம் இல்லை

(பண்டத்தரிப்பு)

கடந்த மூன்று தினங்களாகவலி–மேற்குப் பகுதியில் மின்சார விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளது.

பண்டத்தரிப்பு, சங்கானை, வட்டுக்கோட்டை, சித்தன்கேணி ஆகிய பகுதிகளில் மின்சார விநியோகம் இல்லாததினால் மக்கள் மிகுந்தசிரமம் அடைந்துள்ளனர். சுன்னாகம் மின்சார நிலையத்தில் திடீரென ஏற்பட்ட பழுது ஒன்றே இம் மின்தடைக்குக்காரணம்என்று தெரிவிக்கப்படுகின்றது.

மின்தடையினால் இப்பகுதி அரசாங்க வைத்தியசாலைகளில் குளிர்சாதனப் பெட்டிகளில் வைத்துப் பாதுகாக்கப்படும் ஏற்புத் தடை ஊசி மருந்துகள், குழந்தைகளுக்கு ஏற்படும் நோய்த் தடுப்பு மருந்துகள் பழுதடையக்கூடுமென அஞ்சப்படுகிறது.

## மாணவர் கல்வியைத் தொடர ஏற்பாடு

(வடமராட்சி)

மாணவர்கள் கல்வியைத் தொடருவதற்கு பருத்தித்துறை மெதடிஸ்த உயர் மகளிர் கல்லூரி ஏற்பாடு செய்துள்ளது.

கடந்த வருடம் 1988ம் ஆண்டு டிசம்பர் மாதம் ஜி. சி.ஈ, (சாதாரணம்) பரீட்சையில் மேற்படி கல்லூரியில் தோற்றிய மாணவர்களின் தொடர்கல்விக்கு உதவிசெய்யுமுமாக இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை கிரிக்கெட் போட்டி முடிவுகள்:

# யாழ். இந்து - சென் பற்றிக்ஸ் - சென். ஜோன்ஸ் கோஷ்டிகள் வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டப் பாடசாலைகளிடையே தற்போது நடைபெற்றுவரும் கிரிக்கெட் போட்டிகளில், சென்ற வாரம் நடைபெற்ற ஆட்டங்களின் முடிவுகள் சில வருமாறு:

**சென். பற்றிக்ஸ் வெற்றி**

15 வயது பிரிவுக் கோஷ்டிகளிடையே நடைபெற்ற ஆட்டங்களில், யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரியைப் புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரிக் கோஷ்டி மொத்தம் 123 ஓட்டங்களைப் பெற்றது. றிச்மன் 42ஓட்டங்களையும், அப்துல்லா 20 ஓட்டங்களையும் பெற்றனர். கதிர்காமநாதன் சிறப்பாகப் பந்து வீசி 5விக்கெட்டுகளையும், பிறியேஸ் 2 விக்கெட்டுகளையும் இன்பசோதி, மரியதாஸ், கண்ணன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டுகளை வீழ்த்தினர்கள்.

சென். பற்றிக்ஸ் கல்லூரி தனது முதல் இன்னிங்ஸில் 8 விக்கெட்டுகள் நஷ்டத்திற்கு 142 ஓட்டங்களைப் பெற்றதும் ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது. பிறியேஸ் 32 ஓட்டங்களையும், கதிர்காமநாதன் ஆட்டமிழக்காமல் 28 ஓட்டங்களையும், பிரசாத், சுரேஸ் ஆகியோர் முறையே 24, 17 ஓட்டங்களைப் பெற்றனர். சிமித் பந்து வீசி 4 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

ஆட்டம் முடிவடையும்போது யாழ். மத்திய கல்லூரி 2வது இன்னிங்ஸில் ஒரு விக்கெட் நஷ்டத்திற்கு 12ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

**சென். ஜோன்ஸ் வெற்றி**

17 வயதுக்குட்பட்டவர்கள் பிரிவுக் கோஷ்டிகளிடையே நடைபெற்ற ஆட்டத்தில் சென். ஜோன்ஸ் கல்லூரி, சென். பற்றிக்ஸ் கல்லூரியைப் புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் கல்லூரிக் கோஷ்டி 8 விக்கெட்டுகள் நஷ்டத்திற்கு 194 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது. இக்கோஷ்டி ஒரு கட்டத்தில் ஒரு விக்கெட் நஷ்டத்திற்கு 105 ஓட்டங்களைப் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது. சுதேஸ் 71 ஓட்டங்களைப் பெற்றார். அன்ரனிப்பிள்ளையும், இம்மனுவேலும் தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர்கள்.

சென். பற்றிச்ஸ் முதல் இன்னிங்ஸில் மொத்தம் 84 ஓட்டங்களைப் பெற்றது. விஜேந்திரா 40 ஓட்டங்களைப் பெற்ருர். சிவகுமாரன் சிறப்பாகப் பந்து வீசி 21 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுகளை வீழ்த்தினர். பிரசாந்தன் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர்,

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய சென். பற்றிக்ஸ் கோஷ்டி கடைசி நிமிடத்தில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 114 ஓட்டங்களைப் பெற்றது.

**யாழ். இந்து வெற்றி**

யாழ். இந்துக் கல்லூரிக்கும் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்திற்குமிடையில் நடைபெற்ற போட்டியில் யாழ். இந்துக்கல்லூரி 10 விக்கெட்டுகள் வித்தியாசத்தால் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கனகரத்தினம் வித்தியாலயக் கோஷ்டி 90 ஓட்டங்களைப் பெற்றது.

யாழ். இந்துக்கல்லூரி முதல் இன்னிங்ஸில் 6விக்கெட்டுகள் நஷ்டத்திற்கு 153 ஓட்டங்களைப்பெற்றதும் ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது.

கனகரத்தினம் வித்தியாலயக் கோஷ்டி 2வது இன்னிங்ஸில் மொத்தம் 88 ஓட்டங்களைப் பெற்றது. ஆட்டம் முடிவடையும்போது யாழ். இந்துக்கல்லூரி விக்கெட் நஷ்டமின்றி 11 ஓட்டங்களைப் பெற்றது. (வி)

# "அதிகாரப் பரவலாக்கல் சட்டங்கள் தயாராகின்றன"

## அமைச்சர் தகவல்

(கொழும்பு)

மாகாண சபைகளுக்கு சட்டம், ஒழுங்கு பராமரிக்கப்படுவதற்கான அதிகார பரவலாக்கல் விரைவில் வழங்கப்படுமென்று வெளிவிவகார அமைச்சர் திரு. ரஞ்சன் விஜயரத்ன வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாகத் தற்போது சட்டங்கள் தயாரிக்கப்பட்டுவருவதாகவும், இவை விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயம் விடுத்திருந்த பத்திரிகை அறிக்கையில் அதிகாரப் பரவலாக்கம் தொடர்பாகக் குறிப்பிடப்பட்டிருந்த கருத்துக்கள் சம்பந்தமாகவே வெளிவிவகார அமைச்சு மேற்படி அறிக்கையை விடுத்துள்ளது. அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில்; மாகாண சபைகள் எதிர்நோக்கும் பிரச்னைகளைத் தீர்க்கும்முகமாக ஜனாதிபதி திரு. பிரேமதாசா சம்பந்தப்பட்ட பல அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

பகிர்ந்தளிக்கப்பட்ட அதிகாரங்களைச் செயற்படுத்துவது எட்டு மாகாண சபைகளையும் சார்ந்துள்ளது என்றும், அதிகாரப் பரவலாக்கம் தொடர்பாக அரசியல் யாப்பில் 13வது திருத்தத்திலுள்ள வாசகங்களையும் வெளிவிவகார அமைச்சு அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

## இந்தியப் பிரஜைகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இருந்து வந்த புத்தமதத்தையும் இந்தியாவில் தோன்றிய கௌதம புத்தரையும் பகிஸ்கரிக்க முடியுமா? இங்கே பஜாஜ் ஸ்ட்டர்கள், ஆட்டோரிக்ஷோக்கள் ஏன் இ. போ. சவுக்கு சொந்தமான டாட்டா பஸ்களையும் எரிக்கத்தான் முடியுமா? கேரளாவிலிருந்து வந்த இந்திய உணவுப் பொருட்களை தமிழர்களால் தவிர்க்க முடியாது.'

''இந்தியாவில் மகாத்மா காந்தி நடத்திய சாத்வீக போராட்டமும் பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நடவடிக்கையும் வேறுபட்டது. பிரிட்டிஷ் அரசு அக்காலத்தில் தமது பொருட்களை வாங்குமாறு இந்தியர்களை கட்டாயப்படுத்தவில்லை. பிரிட்டிஷ் பிரஜை பிரஜைகளோ அங்கு வர்த்தக தொடர்பில் ஈடுபட்ட இந்தியப் பிரஜைகளைத் தாக்கவுமில்லை, அவர்கள் மரண பயத்திற்கு உள்ளாக்கப்படவுமில்லை.''

''இலங்கையிலிருந்து இந்திதியப்படைகள் வாபஸ் பெறப்படுவது இரு நாட்டுக்குமிடையிலான விடயம். இதனை இருதரப்பும் பேச்சுக்கள் மூலம் ஓர் கால எல்லையோ, வெளியேற்றம் பற்றியோ குறிப்பிடலாம் இந்தியப்பிரதமர் ராஜீவ் காந்தியும் அமைதிப்படை வாபஸ் பெறப்படுவதை விரும்புகிறார். இலங்கை ஜனாதிபதியும் இதனையே விரும்புகிறார்.''

'''இலங்கையில் தற்போது நாற்பதாயிரத்துக்கும் மேற்பட்ட இந்திய இராணுவத்தினர் உள்ளனர். இவர்களை இரு மாதங்களுள் வாபஸ் பெறுவதில் போக்குவரத்துப் பிரச்னைகள் உண்டு. சம்பந்தப்பட்ட இரு நாடுகளும் பேச்சு வார்த்தைகள் நடாத்தி இந்திய அமைதிப் படையை வாபஸ்பெறச் செய்யலாம்' 'என்றும் திரு. தொண்டமான் தெரித்துள்ளார்.

# விளையாட்டு உத்தியோகத்தர் சேவை நாட்கள்

(கொழும்பு)

இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சு வடக்கு, கிழக்கு மாகாணங்கள் உட்பட நாட்டின் பல பகுதிகளிலும் உள்ள மாவட்டங்கள், உதவி அரசாங்க அதிபர்கள் பிரிவு தோறும் விளையாட்டுத்துறை உத்தியோகத்தர்களை நியமித்துள்ளது.

கீழ் குறிப்பிடப்படும் மைதானங்களில் காலை 7.30 மணி தொடக்கம் 9.30 மணி வரையும் மாலை 2 மணி தொடக்கம் 6 மணி வரையும் பின்வரும் விளையாட்டுத்துறை உத்தியோகத்தர்களின் சேவையைப் பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

**யாழ்ப்பாணம்**

திரு. விமலராஜனை கோப்பாய் பொது விளையாட்டு அரங்கத்தில் வியாழக்கிழமைகளிலும், சங்கானை பொது விளையாட்டு அரங்கத்தில் சனிக்கிழமைகளிலும், வேலுப்பிள்ளை விளையாட்டு அரங்கத்தில் வெள்ளிக்கிழமைகளிலும், யாழ் பிரதான விளையாட்டு அரங்கத்தில் திங்கள் புதன் கிழமைகளிலும் சந்திக்கலாம்.

திரு. ஏ. அண்ணாத்துரையை கோப்பாய் பொதுவிளையாட்டு அரங்கத்தில் திங்கள் புதன் கிழமைகளிலும், புத்தூர் பொது விளையாட்டு அரங்கத்தில் சனி, வெள்ளிக்கிழமைகளிலும், பண்டத்தரிப்பு பொது விளையாட்டு அரங்கத்தில் செவ்வாய் புதன் கிழமைகளிலும் சந்திக்க முடியும்.

திருமதி கே. வைத்தியநாதனை புத்தூர் நகர விளையாட்டு அரங்கத்தில், திங்கள் புதன் கிழமைகளிலும் பண்டத்தரிப்பு பொது விளையாட்டு அரங்கத்தில் செவ்வாய், வியாழக்கிழமைகளிலும், அரியாலை பொது விளையாட்டு அரங்கத்தில் வெள்ளி, சனிக்கிழமைகளிலும் சந்திக்கலாம்.

**மட்டக்களப்பு**

திரு. சாந்தகுமாரை மட்டக்களப்பு பொது விளையாட்டு அரங்கில் திங்கள் புதன், சனிக்கிழமைகளிலும், காத்தான்குடி பொது விளையாட்டு அரங்கில் செவ்வாய் வியாழன் வெள்ளிக்கிழமைகளிலும் சந்திக்கலாம்.

**மன்னார்**

திரு. எஸ். ஜீவரட்ணத்தை மன்னார் நகர் விளையாட்டு அரங்கிலும், வங்காலை பொது விளையாட்டு அரங்கிலும் சந்திக்கலாம்.

**அம்பாறை**

ஜனாப். எம். ஏ. நல்பரை அம்பாறை பொது விளையாட்டு அரங்கில் திங்கள், புதன் கிழமைகளிலும், அட்டாளைச்சேனை பொது விளையாட்டு அரங்கில் செவ்வாய்க்கிழமைகளிலும், சம்மாந்துறை பொது விளையாட்டு அரங்கில் வியாழக்கிழமைகளிலும், கல்முனைப் பொது விளையாட்டு அரங்கில் சனிக்கிழமைகளிலும், அக்கரைப்பற்று பொது விளையாட்டு மைதானத்தில் சனிக்கிழமைகளிலும் சந்திக்கலாம்.

இவ் விளையாட்டுத்துறை உத்தியோகத்தர்களின் சேவையை முழுமையாக பெற்றுக்கொள்ளும்படி இளைஞர் விவகார விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் திரு. சரித்தரத்வத்தை கேட்டுள்ளார்.

## கிளிநொச்சி மாவட்டத்தில்

# 'உரிய தகவல் தராததால் நிவாரணம் வழங்க முடியவில்லை'

### செயல்திட்டப் பணிப்பாளர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சியில் கடந்தகால வன்முறைச் சம்பவங்களால் கடுமையாகப் பாதிக்கப்பட்டவர்கள் உரிய தகவல்களையும், அதற்குத் தேவையான படிவங்களைச் சமர்ப்பிக்காமையினால் அந்த நிவாரணங்களை வழங்கமுடியாதிருப்பதாகக் கிளிநொச்சி மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்புத் திட்டப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக செயல்திட்ட பணிப்பாளர் சம்பந்தப்பட்டவர்களுக்குப் பின்வரும் கோரிக்கையை விடுத்துள்ளார்,

கடும் பாதிப்படைந்தவர்களுக்குரிய நிவாரணங்களைக் கூடிய விரைவில் வழங்கி முடிந்த அளவு அவர்களுக்கு ஆறுதல் அளிக்க விரும்பினாலும், உரிய பத்திரங்களையும், தகவல்களையும் இதுவரை வழங்காத காரணத்தினால் கொடுப்பனவுகளையிட்டுத் தீர்மானிக்கமுடியாதநிலை ஏற்பட்டுள்ளது. எனவே உரிய பத்திரங்களை உடன் அனுப்பிவைக்கவும். இதுதொடர்பான விடயங்களைப் பூரணமாக விளங்கிக்கொள்ள முடியாதவர்கள் அயலிலுள்ள படித்தவர்களின் சேவையைப் பெறலாம்.

## யாழ்- பருத்தித்துறை உதைபந்தாட்ட போட்டி ஒத்திவைப்பு

[யாழ்ப்பாணம்]

இலங்கை உதைபந்தாட்டச் சங்கத்தின் அனுசரணையுடன் மாவட்டத் தெரிவுக் கோஷ்டிகளுக்கிடையாய தற்போது நடைபெற்றுவரும் உதைபந்தாட்ட நொக்கவுட் போட்டியில் பருத்தித்துறை உதைபந்தபட்டத் லீக் தெரிவுக் கோஷ்டியும், யாழ்ப்பாண உதைபந்தாட்ட லீக் தெரிவுக் கோஷ்டியும் ஞாயிறு நெல்லியடியில் மோதவிருந்தஆட்டம் ஒத்திப்போடப்பட்டுள்ளது.

## தொழில் நுட்ப

(4ம் பக்கத் தொடர்ச்சி)

திக இயக்குநரையும், இரண்டு பிரதி இயக்குநர்களையும் கொண்டதாக அமைந்துள்ளது.

கைத்தொழில் அபிவிருத்திக்குத் தேவையான வடிவமைப்பு, தகவல்கள், ஆலோசனைகளை வழங்குவதாகவும், ஆய்வுகளை மேற்கொள்வதாகவும் இந்த நிலையம் செயல்படும்.

இந்த நிலையத்தின் [illegible] அமைப்பும், சேவைகளும் மாகாண மட்டத்தில் விரைவில் விஸ்தரிக்கப்படவுள்ளது.

ஹரன் சினிமா
(யாழ்ப்பாணம்)
3-வது வெற்றி வாரம்
சத்தியராஜ்-நதியா நடித்த
சின்னத்தம்பி பெரியதம்பி

நியூசாந்தி யாழ்நகர்
தினசரி 10-30, 2-30, 4-45
பயங்கரக் கராட்டிகள் வாள்சண்டைகள், கார் ஓட்டங்கள் நிறைந்த படம்.
MAJESTIC THUNDERBOLT
(C/scope)

## பொறியியலாளர் சங்கம்

# கண்காட்சி, போட்டி நடத்த ஏற்பாடு

[யாழ்ப்பாணம்]

இலங்கைப் பொறியியலாளர் சங்க யாழ்ப்பாண கிளையினர் யாழ். கல்வித்திணைக்கள தொழில்நுட்ப பிரிவுடன் இணைந்து புதிய தொழில் நுட்ப கருவிகள், பொருட்கள் கண்டு பிடிப்பாளருக்கான போட்டியொன்றை பாடசாலைகளுக்கிடையில் நடத்தவுள்ளனர்.

இப்போட்டியுடன் விஞ்ஞான பொறியியல் கண்காட்சியொன்றையும் யாழ்ப் [illegible] விஞ்ஞானம் தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் மாணவர்களின் கண்டு பிடிக்கும் ஆற்றலைவிருத்தி செய்து ஊக்கப்படுத்தும் நோக்கத்துடன் இப்போட்டியும், கண்காட்சியும் நடத்தப்படவுள்ளதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிகழ்ச்சிகள் சம்பந்தமான சகல விபரங்களும் யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலைகளுக்கு விரைவில் அனுப்பிவைக்கப்படவுள்ளது.

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## தெல்லிப்பழை முதலிடம்

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்பு கோட்டக் கல்வி அலுவலகத்தினால் கோட்டக்கல்வி அலுவலகமட்டத்தில் நடத்தப்பட்ட கொத்தணி பாடசாலைகளுக்கிடையிலான வருடாந்த மெய்வல்லுநர் போட்டியில் தெல்லிப்பழை கொத்தணி முதலாமிடத்தைப் பெற்றது.

தெல்லிப்பழை மகா ஜனக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் கடந்த வாரம் நடைபெற்ற இப்போட்டியில் இரண்டாம் இடத்தை இளவாலை கொத்தணியும், மூன்றாமிடத்தைப் பண்டத்தரிப்பு கொத்தணியும் பெற்றன. தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அதிபர் ? ரு. நாகராசா தலைமையில் நடைபெற்ற இப்போட்டியில் பண்டத்தரிப்பு கோட்டக் கல்வி அதிகாரி திரு. இ. சிவானந்தன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். கல்வி அதிகாரி திரு. கு. உதயகுமார் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களை வழங்கினர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சம்பள உயர்வு - பதவி உயர்வு புறக்கணிப்பு:

# சிங்களத் தேர்ச்சி இல்லை ஒரு காரணமா?

(யாழ்ப்பாணம்)

கல்வித் திணைக்களத்தில் தொழில் நுட்ப ஊழியர்களாகக் கடமையாற்றும் பலர் சிங்களத் தேர்ச்சி இல்லை என்ற காரணத்தால் சம்பள உயர்வையும் பதவி உயர்வுகளையும் இழந்துள்ளனர் எனத் தெரிய வருகிறது.

இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாக சேவையாற்றியுள்ள மேற்படி ஊழியர்கள் 'மாகாண அரசின் நிர்வாகத்துக்குக் கீழ் கல்வி நிர்வாகம் செயல்படும் போது கூட சம்பள உயர்ச்சி, பதவி உயர்ச்சி கிடைக்கவில்லை' என்று கவலை தெரிவிக்கின்றனர்.

# "மாணவரின் வரவைப் பொறுத்து வகுப்புகள் நடைபெறவேண்டும்"

## பிரதிக் கல்விப்பணிப்பாளர் பணிப்புரை

[யாழ்ப்பாணம்[

''பாடசாலை அதிபர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தைக்கூட்டி அவர்களுடைய ஒத்துழைப்புடன் பாடசாலையை நடத்துவதற்குரிய ஒழுங்குகளை மேற்கொள்ள வேண்டும்'' என்று யாழ். கல்வித்திணைக்களப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி சகல பாடசாலை அதிபர்களுக்கும் விடுத்துள்ள பணிப்புரையில் கேட்டுள்ளார்.

இப்பணிப்புரையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''யாழ். மாவட்டத்திலுள்ள சகல பாடசாலைகளும் திறக்கவேண்டும்.

''சகல ஆசிரியர்களும் பாடசாலைகளுக்குச் சமூகம் கொடுப்பதுடன் பாடசாலை முடிவடையும் நேரம்வரை அங்கேயே இருத்தல்வேண்டும்.

''பாடசாலைக்கு கணிசமான அளவு மாணவர்கள் சமூகம் கொடுக்கும் பட்சத்தில் வகுப்புகள் நடத்தப்படல்வேண்டும்.''

# ரூபா 40 லட்சம் நகைகள் திருமலையில் மீட்கப்பட்டது

[திருகோணமலை]

நாற்பது லட்சம் ரூபா பெறுமதியான களவாடப்பட்ட நகைகள் திருகோணமலைப்பகுதியில் ஒரு வாகனத்திலிருந்து நேற்று மீட்கப்பட்டன.

இந்தச் சம்பவம்பற்றி கூறப்படுவதாவது;

திருகோணமலைப் பகுதியில் விரைந்து சென்றுகொண்டிருந்த வான் ஒன்றை நிறுத்துமாறு பொலிஸார் கட்டளையிட்டனர். ஆனால் பொலிஸாரின் கட்டளைக்கு செவிசாய்க்காமல் அந்த வான் விரைந்து சென்றுகொண்டிருந்தது. இதனையடுத்து பொலிஸார் அந்த வானை துரத்திச் சென்று இடைமறித்தனர்.

இந்த வான்மீது துப்பாக்கிப் பிரயோகம்செய்ய நேரிட்டதாகவும், அதன் காரணமாக அதன் சாரதி கொல்லப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

வாகனத்திலிருந்து ரூபா 40 லட்சம் பெறுமதியான நகைகள் மீட்கப்பட்டதுடன் வானில் சென்ற மற்றும் நான்கு பேர் கைதுசெய்யப்பட்டனர் என்றும்பொலிஸார் தெரிவித்தனர்.

# நாரந்தனையில் ரூ. 4 லட்சம் கொள்ளை!

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை, நாரந்தனை எனுமிடத்தில் இரு வீடுகளில் புகுந்த கொள்ளையர்கள் துப்பாக்கி முனையில் வீட்டிலிருந்தவர்களைப் பயமுறுத்தி நான்கு லட்சம் ரூபா பெறுமதியான நகைகளையும், இருபதினாயிரம் ரூபா ரொக்கப் பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர் என்று புகார் செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினமிரவு சைக்கிள், மோட்டார் சைக்கிள்களில் துப்பாக்கி சகிதம்வந்த இனந்தெரியாத பத்துப்பேர் கொண்ட கோஷ்டி நாரந்தனையிலுள்ள, யாழ். தொழில் நுட்பக்கல்லூரி உத்தியோகத்தரான இ. சிவலிங்கம் என்பவரின் வீட்டில் புகுந்து இவரது மனைவி, பிள்ளைகள், உறவினர்களை துப்பாக்கி முனையில் அறையொன்றினுள் பணயம் வைத்து அவர்கள் அணிந்திருந்த தாலிக்கொடி, காப்பு, சங்கிலி, தோடு உட்பட அனைத்து நகைகளையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளது.

இதேபோல, மேற்படி வீட்டிற்கு அருகிலுள்ள ஆ. பஞ்சாட்சரம் என்பவரின் வீட்டிலும் மேற்படி நபர்கள் புகுந்து வீட்டிலுள்ளவர்களைப் பயமுறுத்தி இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான நகைகளையும், பத்தாயிரத்திற்குமதிகமான ரொக்கப்பணத்தையும் துப்பாக்கி முனையில் கொள்ளையடித்துச் சென்றுள்ளனராம்.

# மதிய உணவு பற்றி இன்று முக்கிய ஆலோசனை

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளில் வழங்கப்படும் மதிய உணவு சம்பந்தமான ஆலோசனைக்கூட்டமொன்று இன்றுகாலை யாழ். கல்வித்திணைக்களத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள கொத்தணி அதிபர்கள் கோட்டக்கல்வி அதிகாரிகள் கலந்துகொள்ளும் இக்கூட்டத்தில் கொழும்பு கல்வி அமைச்சில் மதிய உணவுக்குப் பொறுப்பான அதிகாரியாகவுள்ள கல்விப் பணிப்பாளர் திரு. வெ. சபாநாயகம் கலந்துகொண்டு மதிய உணவுத்திட்டம்பற்றி விளக்குவார்.

## விபத்தில் இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

வசாவிளானில் நேற்று முன்தினம் இரு மோட்டார் சைக்கிள்கள் எதிர் எதிரே மோதுண்டதில் இருவர் பலத்த காயங்களுக்குள்ளாகினார்கள்.

வண. பிதா. பீற்றர் (வயது -44) துரைராஜா சந்திரன் (வயது 20) ஆகியோரே மேற்படி விபத்துக்குள்ளாகி காயங்களுடன் யாழ். வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

## வருமானவரி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முகத்துக்கு (வயது 58) ஐந்து பிள்ளைகள் உண்டு. புலோலி தெற்கு கிராமக்கோட்டடியில் வசிக்கும் இவர் நேற்று முன்தினமிரவு தமது உறவினரான பெண்மணி ஒருவரின் வீட்டில் இருந்துள்ளார், அதிகாலைவேளையில் இவர் பனங்காணியில் நுங்கு பொறுக்கிக் கொண்டிருந்த போது துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி மரணமானார், சம்பவநேரம் இரவேளையில் அவ்வீதியால் பல பெரிய வாகனங்களுடன் பலர் நடந்து சென்ற சத்தங்களுக் கேட்டதாக அயலவர்கள்தெரிவித்தனர்.

## 'சிரித்திரன்' ஆசிரியர் சுகயீனம்

(யாழ்ப்பாணம்)

'சிரித்திரன்' ஆசிரியர் திரு. சிவஞானசுந்தரம்நோய்வாய்ப்பட்டு யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருகிறார்.

'சிரித்திரன் சிரிப்புக் கொத்து' நூலுக்கு முன்னுரை எழுதிக்கொண்டிருந்த போது திடீரென இவரின் கை பாதிக்கப்பட்டு சுகயீனமுற்றதைத் தொடர்ந்து இவர் யாழ். ஆஸ்பதத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## பஸ் சேவை தொடர்ந்து பாதிப்பு

(கொழும்பு)

இலங்கை போக்குவரத்துச் சபையின் தற்போதைய வேலை நிறுத்தம்பற்றிபோக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திரு. எம். செல்லச்சாமி நேற்று தொழிற் சங்கப் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினார,

பேச்சுவார்த்தைகள்மேலும் தொடரவிருக்கின்றன.

இதேவேளையில் நாசகார நடவடிக்கைகள் காரணமாக சேதமடையும் தனியார் பஸ்களுக்கு விசேட காப்புறுதித் திட்டமொன்று அமுல் செய்யப்படுமென்று அரசாங்கம் நேற்று அறிவித்தது.

பஸ் சேவை தொடர்ந்து பாதிக்கப்பட்டுள்ளது.

## இளம்பெண்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். ஆஸ்பத்திரிச் சவச்சாலையில் இருந்த இவரது சடலம் உறவினரால் அடையாளம் காணப்பட்டது.

மரணவிசாரணையின்பின்னர் உறவினரிடம் சடலம் நேற்று ஒப்படைக்கப்பட்டது.

## பருத்தித்துறையில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பீதியுடன் நடமாடுகின்றனர்.

பருத்தித்துறை நகரில் மக்கள் காலைவேளைகளில் மாத்திரமே கூடுதலாக நடமாடுகின்றனர். நண்பகலுடன் கடைகள் மூடப்பட்டுவிடுகின்றன. சந்தைகள் குலைந்துவிடுகின்றன. வீதிகளில் மக்கள் நடமாட்டமின்றி வெறிச்சோடிக் கிடக்கின்றன. பருத்தித்துறையில் காய்கறி மற்றும் பொருட்களுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது.

## இளைஞர்களை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

''கடந்த சில தினங்களாக வடக்கு-கிழக்கு பகுதியெங்கும் மாணவரும், இளைஞர்களும் கடத்தப்பட்டு வருகின்றார்கள். சட்டத்தையும், ஒழுங்கினையும் பராமரிக்கப்போவதாகக் கூறிக்கொள்வோர் இவ்விதம் செயல்படுவதை நாம் மிக வன்மையாகக் கண்டிக்கிறோம். இத்தகைய செயல்களால் ஆக்கபூர்வமான எந்தப்பயனும் ஏற்படாது என்பதனையும், அமைதி, ஜனநாயகம்என்பன கேலிக் கூத்தாகிவிடுமென்பதையும் உறுதியாகக் கூறிவைக்க விரும்புகின்றோம், எனவே இவ்வாறு கடத்தப்பட்ட ஆயிரக்கணக்கான இளை[illegible] செய்யுமாறு சகல தமிழ்பேசும் மக்கள் [illegible] சார்பாகவும் கோரிக்கை விடுக்கின்றோம்''.

# கைக்குண்டு வெடித்து ஒருவர் காயம்

[கொழும்பு]

ஹட்டனில் காமினிபுர எனும் இடத்தில் தீவிரவாதி ஒருவர் வைத்திருந்ததாக சந்தேகிக்கப்படும் கைக்குண்டு ஒன்று வெடித்ததினால் ஏற்பட்ட பலத்த காயங்களுடன் ஒருவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டபோது பொலிஸார் அவரைக் கைதுசெய்தனர்.

காயம் எப்படி ஏற்பட்டது என்று பொலிஸார் விசாரித்த போது, இனந்தெரியாத நபர் ஒருவர் ஒரு பார்சலைத்தந்து சிறிதுநேரம் வைத்துக்கொள்ளுமாறு கூறியதாகவும், சிறிது நேரத்தில் அது வெடித்ததாகவும் அவர் கூறினார். இதனை அடுத்து பொலிஸார் அவரைக் கைதுசெய்தனர்.

## கிராமசேவை அலுவலர் விடுவிக்கப்பட்டார்

[பருத்தித்துறை]

இந்திய அமைதிகாக்கும் படையினரால் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருந்த நாகர்கோவில் கிராம சேவை அலுவலர் எஸ். வசந்தகுமார் விடுதலை செய்யப்பட்டார்.

இவர் பருத்தித்துறையில் வைத்து கைதுசெய்யப்பட்டார்.

## அமைதிப்படை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரச்னை ஒன்றுக்கு பதிலளிக்க முடியாது'' என்று பிரதமர் திரு. காந்தி நாசுக்காகப் பதிலளித்தார்.

பிரதமர் திரு. காந்தி மேலும் கூறியதாவது:

''இலங்கை-இந்திய ஒப்பந்தத்துக்கமைவாக இலங்கைத் தமிழ் மக்களை இந்தியாவே காப்பாற்ற வேண்டும்.

''தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டிய இந்தியா, இலங்கையின் அமைதிக்கும்ஒப்பந்தத்தில் உத்தரவாதமளித்துள்ளது. இந்தியா தனது கடப்பாடுகளை நிறைவேற்றியேதீரும்.''

இதேவேளை இந்திய அமைதிப்படையை விலக்கிக்கொள்வது தொடர்பாக இந்தியா இலங்கைக்குத் தெரிவிக்கவிருந்தஉத்தியோகபூர்வ பதில் முன்னர் எதிர்பார்க்கப்பட்டதுபோல் விரைவில் வெளியிடப்படாது எனத் தெரிகிறது.

இந்த விவகாரம் ஐ. நா. பாதுகாப்புச் சபைக்கும் சர்வதேச நீதிமன்றத்துக்கும் எடுத்துச் செல்லப்படவுள்ளதாக வெளிவந்த செய்திகளைத் தொடர்ந்தே இந்தியா தனது நிலைப்பாட்டைத் தெரிவிப்பதை தாமதப்படுத்துவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய நிலைப்பாடு உத்தியோக பூர்வமாக தெரிவிக்கப்பட்டதும் இருநாடுகளுக்குமிடையிலான பேச்சுக்கள் பெரும்பாலும் புதுடில்லியில் நடைபெறலாமெனஇராஜதந்திரவட்டாரங்கள் எதிர்பார்ப்பதாகக் கூறப்படுகிறது.

பிரதமர் ராஜீவ் காந்தி இலங்கை ஜனதிபதிக்கு அனுப்பும் விசேட கடிதத்தை அடுத்தே இப்பேச்சுக்கள் ஆரம்பமாகும். இதற்கான காலமும் குறிப்பிடப்படும். பிரதமர் காந்தியின் விசேட கடிதத்தை இலங்கை அரசு எதிர்பார்த்துள்ளது.

## கோண்டாவிலில் திருட்டு

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் பகுதியில் உள்ள வீடொன்றில் யன்னல்களைப் பெயர்த்தெடுத்து உள்ளேசென்ற கொள்ளையர் அங்கு பணப்பெட்டியிலிருந்த ஒரு லட்சம் ரூபா பெறுமதியான நகை, பணம் என்பனவற்றை திருடிச் சென்றுள்ளனர்.

கொள்ளை நடந்த சமயம் வீட்டார் நித்திரையாக இருந்தனர் என்று தெரியவருகிறது.

## மதிய உணவு நேரம்

(யாழ்ப்பாணம்)

பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு வழங்குவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நேரம் மாணவர்கள் கல்வி பயில்வதற்குத் தடையாக இருக்காமல் பார்த்துக்கொள்ளவேண்டும் என்று யாழ். பிரதிக் கல்விப் பணிப்பாளர் சகல கொத்தணி அதிபர்களுக்கும் அறிவித்துள்ளார்.

## 100 தொன் தந்தங்கள் இறக்குமதி

(டோக்கியோ)

ஜப்பான் கடந்த ஆண்டு 10 ஆயிரம் யானைகளிலிருந்து பெறப்பட்ட 100 தொன் தந்தங்களை இறக்குமதி செய்துள்ளது.

இந்த ஆண்டு யானைத் தந்தங்கள் இறக்குமதியில் ஜப்பான் சில கட்டுப்பாடுகளை விதித்துள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

## உணவு முத்திரை வழங்கப்படவில்லை

[ஆழியவளை]

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு புதிய உணவு முத்திரைகள் வழங்கப்படவில்லை, இதற்கான ஆயுத்தங்களும் நடைபெறவில்லை.

ஓரளவு உணவுமுத்திரையை நம்பி வறுமைக் கோட்டில் வாழும் மக்கள் இதனால் மிகவும் கஷ்டமுறுகிறார்கள்.

## சட்டவிரோத மின்பாவனை அதிகரிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பிரதேசசபையின் நிர்வாகத்திலுள்ள நகரப் பகுதியில் சட்டவிரோத மின்சாரபாவனை அதிகரித்துள்ளது இதனால் அங்கீகாரம் பெற்ற மின்பாவனையாளர்கள் பாதிப்படைந்துள்ளதாகவும் பெரும் அபாயநிலையை மக்கள் எதிர்நோக்கியுள்ளதாகவும் புகார் தெரிவிக்கப்படுகிறது.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1989ம் ஆண்டு ஜூன் மாதம் 20-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sr iLanka under number B/1003-6/81. Eelanadu P. O. Box No: 49. Telegram, Eelanadu. Telephone; 22389. 24126.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org